
# திராவிடநாடு

2
அணா



திருமதி சன்யாட்சன்




**தம்பி,**

இந்தப் பழைய பாடத்தைப்பற்றிப் புதிதாக இப்போது சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது—என்ன அவசியம் வந்தது—எத்தனையோ பிரச்சினைகள் நெஞ்சைக் குலுக்கும் வகையினதாக உள்ளனவே—அண்ணன் ஏன் இந்தப் பழசுக்குப் போகிறார் என்று எண்ணுகிறாய், தெரியும் எனக்கு. எனக்கும் 'பழசு' பிடிக்காதுதான், தெரியுமே உனக்கும்; என்றாலும் எனக்கு ஏனோ இன்று இங்கு வந்தவுடன் (சென்னைக்கு) 'பழசு'மீது நினைவு சென்றது—அதற்கும் காரணம் இருக்கிறது—'அறிவகத்தில்' சிறு குன்றுபோல, பழைய துணிகள் உள்ளன, சிறுசிறு மூட்டைகளாக—நமது தோழர்கள் இங்கு திரட்டியவை. மிகமிகத் தேவையான காரியத்துக்கு இவை பயன்படப்போவதால், பழைய துணிகள்மீது ஒரு பாசமும், அதைத் தொடர்ந்து பொதுவாகவே 'பழசு'மீது எண்ணமும் சென்றது — அதன் விளைவுதான், தம்பி, பழைய பிரச்சினையாகிய 'குருபக்தி'மீது என் நினைவு சென்றது.

பிரச்சினை 'பழசு'; ஆனால் இந்தப் புதிய காலத்துக்கு முற்றிலும் தேவையற்றது என்று தள்ளிவிடக் கூடியதல்ல — பொருளும், பொருள் அறியும் முறையும்; பயனும், பயன் காணும் வகையும் புதுப்பிக்கப்படவேண்டியதாகவோ, பழுதுபார்க்கப்படவேண்டியதாகவோ இருக்கலாம்; ஆனால், அந்த 'எண்ணமே' தேவையில்லை என்று விரட்டிவிட முடியாததல்லவா? எனவே இன்று 'குருபக்தி'யைக் குறித்து நீயும் நானும் எண்ணிப் பார்ப்பது தேவையற்றதுமல்ல, பயனற்றதுமல்ல—உண்மையிலேயே, இந்தப் பிரச்சினையை ஆராய்வதன் மூலம் பயன் தரத்தக்க சில பல கருத்துக்களைப் பெறவும் முடியும்.

தம்பி! குரு என்ற உடன் பழைமையில் மூழ்கிக்கிடப்போரின் மனக்கண் முன், ஜடையும் தாடியும் கொண்ட, வளைந்து தைலம் தீர்ந்துபோன உடலுடன் காட்சி தரும் வயோதிகர், மரத்தடியில் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருப்பதும், அவர் எதிரே 'சிறுசும் பொடிசு'மாகச் சீடர்கள் பயபக்தியுடன் வீற்றிருப்பதுமான காட்சிதான் தெரியும். அந்தக் காலம் மலை ஏறிவிட்டது—எனினும் அந்தக்காலம் மீண்டும் வராதா என்று ஆவலுடன் காத்துக் கிடக்கும் ஆச்சாரியஸ்வாமிகள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பழைய நாட்களிலே, 'குரு' மார்கள் 'பலரகம்' இருந்திருக்கிறார்கள்; அனைவரும் அறிவர்.

கட்டைவிரலை வெட்டிக் கொடு காணிக்கையாக என்று கேட்டவரும் இருந்திருக்கிறார், கட்டழகியைச் சீடன் கொட்டிவிட்டது கண்டு மட்டற்ற துயருற்ற குருவும் இருந்திருக்கிறார்.

கைகால் பிடித்துவிடவும் கட்டைகள் வெட்டிவரவும், கால் நடைகளை ஓட்டிச் செல்லவும், கறி காய் நறுக்கித் தரவும், மட்டுமே பயிற்சி பெற்று, பாடம் கிடைத்ததெனப் பர்ணசாலையை விட்டு வெளியேறிய சீடரும் இருந்திருக்கிறார்கள்—குரு, பாடம் சொல்லிக் கொடுக்கும்போதே 'வெட்டிவா என்றால் கட்டிக்கொண்டு வருகிற' வகையில், அறிவுத் தெளிவு பெற்று விளங்கிய சீடர்களும் இருந்திருக்கிறார்கள்.

'பழைய' நாட்களிலே இருந்த 'ரகம்' கிடக்கட்டும், இப்போது உள்ளவர்பற்றி எண்ணிப் பார்ப்பது, உடனடிப் பலனளிக்க உதவுமல்லவா, தம்பி, அதற்குச் சிறிது சிந்தனையைச் செலவிடு.

இப்போது, நிதி அமைச்சராக இருக்கும் **கனம். சுப்பிரமணியம்** காமராஜர் முதலமைச்சராக இருக்கும் அமைச்சர் அவையில் இடம் பெற்றிருக்கிறார்—ஆனால் அவர் காமராஜரைத் தலைவராகவோ, குருவாகவோ கொள்பவரல்ல — அவருடைய 'குருநாதர்' ஆச்சாரியார்தான்! அவர் அரியாசனத்தில் அமர்ந்திருந்தாலும் சரி, அரிகதாகாலட்சேபம் நடாத்திக்கொண்டிருந்தாலும் சரி, சுப்பிரமணியனாருக்கு ஆச்சாரியார்மீதுதான் குருபக்தி; அதை வெளியிட வேண்டிய நேரத்தில், தவறாது செய்கிறார்—சில வேளைகளில் பொருத்தம் கூட இருப்பதில்லை, ஆனால் 'பக்தி'க்குத்தான் பொருத்தம் கூடப் பார்க்க வேண்டியதில்லையாமே, அதனால் எந்தச் சமயம் கிடைத்தாலும், தமது குருபக்தியைக் கொட்டிக் காட்ட, கனம், தவறுவதில்லை.

நாடே குமுறிடத்தக்கக் கேடொன்று நேரிட்டது — புயற் கொடுமை; கேள்விப்பட்டதும் ஓடோடிச் சென்றார் முதலமைச்சர்—வெறுங்கையுடன் அல்ல—விதவிதமான பண்டங்களை மூட்டைமூட்டையாக ஏற்றிக்கொண்டும்—உயர்தர அதிகாரிகளை உடனழைத்துக்கொண்டும் சென்றார்—கண்ணீரைக் கண்டார், கண்ணீர் சொரிந்தார்—வேகவேகமாக 'நிவாரண' வேலைகளைத் தொடங்கினார், புயற் கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்கள் 'புண்ணியவானே என்று அவரை வாழ்த்துகிறார்கள். இது கண்டு, நாமெல்லாம், எதிர்க்கட்சியினர், எனினும் நல்ல இதயம் கொண்டோரை, நற்பணியாற்று

(3-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 25-12-55 [இதழ் 25

# புது யோசனை!

தூது வந்த கிரிப்ஸ் "அப்போதே சொன்னார், ஆனால் அதற்கும் இதற்கும் வித்யாசமிருக்கிறது; அவர், மத்ய சர்க்காருக்கு அவ்வளவு பலம் இருக்க வேண்டுமென்று கருதவில்லை, ஆனால் இவர் மத்ய சர்க்காரின் பலம் எதுவும் குறையாத வகையிலேயே இந்த யோசனையைத் தெரிவித்துள்ளார் என்று 'இந்து' ஏடு வெளியிட்டுள்ளது ஒரு செய்தி!

டிசம்பர் 21ந் தேதி டில்லிப் பார்லிமெண்டிலே, 'திடீர்' வேட்டுப் போடுவது போல செப்பியுள்ளாரல்லவா பண்டித நேரு—இந்தியாவை, வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தியிலிருப்பது என்று ஐந்து பெரும் பிராந்தியங்களாகப் பிரித்து, அவைகளுக்கென ஒரு கவர்னரும் ஆலோசனை சபையும் அமைப்பதே சாலச் சிறந்தது எனக் கருதுகிறேன், என்பதாக. அந்த யோசனையை அவர் வெளியிட்ட கொஞ்ச நேரத்துக்கெல்லாம், 'உள் நாட்டிலாகா' பரபரப்படைந்து விட்டதாம்! உடனே, அதை யெப்படி யெப்படி அமுல் நடத்தலாம்-என்னென்ன சிக்கல்கள் உருவாகும்-சட்டப் பிரச்னைகள் என்ன, என்பதுபற்றியெல்லாம் பரபரப்புடன் ஆலோசிக்கத் தொடங்கி விட்டதாம்!! இந்த அவசரச் செய்தியை அறிவிக்கும் ஏடு, ஒருதிருப்தியும்அடைகிறது — காலஞ்சென்ற பிரிட்டிஷ் அறிஞர் கிரிப்சும் இப்படியொரு யோசனை சொன்னாரே என்று நினைக்கக்கூடும்; அது அப்படிப் பட்டது; இவர் கூறுவது, இப்படிப் பட்டது என்கிற விளக்கத்தை அளிப்பதன் மூலம்.

கிரிப்ஸ், பலமற்ற மத்ய சர்க்கார் இருக்கும்படியாகத் தெரிவித்தாராம். நேரு, பலமான மத்ய சர்க்காரும் அதே சமயத்தில் நாட்டின் பொருளாதார நிலை வளமாகும் வகையிலும் பிராந்திய வாரியாகப் பிரிக்கலாம், என்கிறாராம்!!

ஆச்சாரியாரின் புத்திமதிப்படி புறப்பட்டதா இந்த ஞானம் அல்லது திடீரென்று உதயமாயிற்றா என்கிற விபரங்களும், இந்த யோசனையால் ஏற்படக்கூடிய பலாபலன்களும் அல்ல, இப்போது நாம் கவனிக்க வேண்டியது. ஏனெனில், எது எப்படியானாலும் எஜமானனாக இருக்கப்போவது டில்லிதான்! நேரு பண்டிதர் காலம் வரையில், இதனை விட்டுக் கொடுக்க மாட்டார்கள், வடவர்கள்!!

ஆனால், அவர் பார்லிமெண்டில் யோசனைவெளியிட்டசிறிது நேரத்துக்கெல்லாம், உள்நாட்டிலாகா பரபரப்படைந்து அதுபற்றிய ஆலோசனைகளைச் செய்வதாகவும், அமைச்சர் உடனே அது பற்றிய குறிப்புகளைக் கேட்பதாகவும் செய்தி வருகிறதே, அதுவே நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

மொழிவாரி மாகாணப் பிரிவினை எனும் பெயரால் மூண்ட, தீ, அடங்கிய பாடில்லை! மூலைக்கு மூலை-இடத்துக்கு இடம் — பற்றிக்கொண்டு எரிகிறது. அமைதி இருக்குமிடம் எதுவும் இல்லை. இந்த நிலைமையில், இப்போது இன்னொரு திடீர் யோசனை! அது நேரு பண்டிதருக்கு உதித்திருக்கிறதென்றதும் — பரபரப்பு! பதட்டம்! சட்ட ஆலோசகர்கள் அழைக்கப்படுகிறார்கள்! நிருபர், அதன் 'தகுதி' பற்றி ஆராயக் கிளம்புகிறார்!

ஆய்ந்தோய்ந்து பாராமல், அவசரக் கோலம் அள்ளித் தெளிப்பதாலேயே, இந்திய உபகண்டம், நிம்மதியான வாழ்வைப் பெறாததோடு, நிதிகளையும் விரய மாக்கிக்கொண்டே யிருக்கிறது-எனும் பட்டியல்களை அனுதினமும் காண்கிறோம். அந்தப் போக்குக்கு இந்தச் செய்தியும் ஒரு உதாரணமாகும்.

★

2-ம் பக்க தொடர்ச்சி

வோரைப் பாராட்டும் பண்பு அறிந்தவர்கள் என்ற முறையில், காமராஜரையும் அவர் நடத்திச் செல்லும் துரைத்தனத்தையும் மனதாரப் பாராட்டுகிறோம். ஆனால் உடனிருந்து பதவிபெற்று வாழ்ந்து வரும் கனம். சுப்பிரமணியனாருக்கு, யார்மீது 'நினைவு' செல்கிறது என்கிறாய்? யாரிடம் பாசம், பரிவு, பக்தி, பீறிட்டுக்கொண்டுக் கிளம்புகிறது என்கிறாய்? முழங்காலளவு தண்ணீரில் நடந்து சென்றவர் மீதல்ல, எப்புரியில் எது நேரிடினும், 'முப்புரி'க்கு ஆபத்தேதும் வராமலிருக்கும் வரையில், ஆயாசப் படவேண்டியதில்லை என்று எண்ணும் ஞானவான் இருக்கிறாரே, ஆச்சாரியார், அவர்மீதுதான் செல்கிறது அமைச்சரின் நினைவு!!

தம்பி! குருபக்தி—தலைக்கு அவ்வளவு ஏறி இருக்கிறது.

நந்தவனத்திலே உலவிக்கொண்டிருந்த நாரிமணியை ஒரு 'பூதம்' சிறை எடுத்துச்சென்று, யாரும் நுழைய முடியாத காட்டிலே இருந்த மாய மாளிகையில் சிறை வைத்து பொன்னும் பொருளும் கொட்டிக் காட்டி, புன்னகை தந்தால் போதுமென்று கேட்க, நவ நிதி கொடுத்தாலும், என் நாதனை நான் மறவேன் என்று அந்த நாரி மணி சொன்னாள்—என்று கதைகளில் படிக்கிறோமல்லவா, அது போல நிதிக்கும் மதிக்கும் அமைச்சரே! என்ன மாறுதல் நேரிடினும், எவர் போனாலும் எவர் புதிதாக வந்தாலும் உமக்கு ஓர் இடம் உண்டு! என்று சொல்லி அமைச்சர் அவையில், இவருக்குக் காமராஜர் இடமளித்திருந்த போதிலும் இருந்திருந்து

"வள்ளிக்கணவன் பேரை
வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளம் குளிருதடி, சகியே!"

என்று உருகிப் பாடுகிறார், நிதி அமைச்சர். குருபக்தி, தம்பி, குருபக்தி!

இவருடைய குருநாதர் ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலேயும் புயல் கொடுமை விளைவித்தது—என்ன செய்தார் குருநாதர்? பகவத்சோதனை என்று கூறிவிட்டு, மற்றக் காரியங்களைக் கவனிக்கலானார். இரவு பகலென்று பாராமல், வெள்ளம் வெடிப்பு என்று அஞ்சாமல், அந்தஸ்து பற்றித் துளியும் கவனிக்காமல், அவதியுறும் மக்களைக் கண்டு, இன்னலைத் துடைத்திட வேண்டும் என்று காமராஜர் சென்றார் — ஆச்சாரியாரோ— கோட்டையில் கொலுவிருந்தார்! அவருக்கு, இப்போதும், சீடர் நன்றிகூறுகிறார்—குருபக்தியென்றால் இஃதல்லவா குருபக்தி,

வெள்ளம் விளைவித்த பெரு நஷ்டத்தால், வேதனைப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு மீண்டும் வாழ்வளிக்கும் திட்டம் நிறைவேற்றப் பட வேண்டுமானால், இதற்குப் பெரும் பொருள் செலவாகும்— இதற்கு மத்திய சர்க்கார்—டில்லி தேவர்கள்—பெருந்தொகை உதவ வேண்டும் என்பதை, நேருவுக்கு உணர்த்தினார் காமராஜர் —நாட்டிலே காமராஜர் ஆட்சி எத்தகைய அமைதியை (ஆனந்தத்தை அல்ல) ஏற்படுத்தி இருக்கிறது, எதிர்ப்புகள் எந்த அளவுக்குச் சுருங்கிப்போயுள்ளன என்பதை

எல்லாம் கண்ட நேருவும், நிவாரணத்துக்காகச் செலவிடப்படும் தொகையில் 'பாதி' அளவு மத்ய சர்க்கார் அளிக்கும் என்று தெரிவித்தார்.

இதற்கு, யாருக்கு நன்றி கூற வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய் தம்பி!

நம்போன்ற செய்நன்றி மறவாதார் டில்லியின் மனமும் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஓரளவுக்கு இளகும்படி செய்தார் என்பதற்காகக் காமராஜருக்குத்தானே நன்றி கூறவேண்டும் என்று எண்ணுவோம். நிதி அமைச்சர் அப்படி எண்ணவில்லை — அவருடைய மனம், குருநாதன்மீது சென்றது, ஐயனே! போற்றி! மெய்யனே போற்றி, போற்றி! உமது ஆசியால், அருளால்தான், இந்தப் பேறு பெற்றோம்! என்று கூறி குருவைத்தான் பூஜிக்கிறார்.

'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை நிருபரிடம், இந்தத் திங்கள் பத்தாம் தேதி "மத்திய சர்க்கார் மனமுவந்து செலவுத் தொகையில் பாதி அளவு தர முன்வந்ததற்கு, **நாம் இராஜகோபாலாச்சாரியாருக்குத்தான் நன்றி கூறவேண்டும்**— ஏனெனில், 1952ல், இப்படி ஏதேனும் ஒரு விபத்து நேரிட்டால், மத்திய சர்க்கார் பண உதவி தரவேண்டும் என்று, ஆச்சாரியார்தான், நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் பேசினார்—அதற்கு இணங்கியே, மத்திய சர்க்கார் இந்த உதவிசெய்கிறது" என்று கூறி இருக்கிறார்.

பார்த்தாயா, தம்பி! குருபக்தியை!!

வெள்ளமென்றும் வெடிப்பென்றும் பாராமல் சுற்றிச் சுற்றி வந்தாரே காமராஜர் — வீழ்ந்துபட்ட மக்களுக்காக வெந்த மனதுடன் வாடிக் கிடக்கும் மக்களிடம் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாரே, காமராஜர்—அவருக்கல்ல நன்றி! இராஜகோபாலாச்சாரியாருக்கு நன்றி! ஏன்? 1952லேயே அவர், இந்த அரிய யோசனையைக் கூறிவிட்டாராம், அதனால். இதுதான் தம்பி, கடைந்தெடுத்த குருபக்தி!!

'குருபக்தி'யைக் கொட்டிக் காட்டியதோடு விட்டுவிடவில்லை, இந்த வீரர். இரண்டு இலாகாவுக்கல்லவா அமைச்சர். அதுபோலவே, இரண்டு சீரிய தொண்டு புரிவதை அல்லவா அவர் வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டிருக்கிறார்—ஒன்று குருநாதரையும் அவருடைய கூடாரத்தினரையும் குதூகலப்படச் செய்வது, மற்றொன்று இன எழுச்சி யூட்டும் நம்மைக் குத்திக் குதூகலிப்பது. எனவே, குருபக்தியைக் காணிக்கையாக்கியதும், நம்மைக் குத்தி மகிழ்கிறார்-குத்துவதால் மகிழ்ச்சி எப்படிப் பிறக்கும் என்கிறாயா, தம்பி! சிலருக்கு அப்படி ஒரு நினைப்பு. தாங்கள் குத்துவதால், நமக்கு வலிக்கும்; வேதனை அடைவோம், அதைக்கண்டு மகிழ வேண்டும் என்பது. அமைச்சர் சுப்பிரமணியம் அந்த ரகம்.

வடக்கு — தெற்கு என்று வம்பு பேசுகிறவர்கள், வடக்கு தெற்கைப் புறக்கணிக்கிறது என்று கண்டனம் கிளப்புகிறவர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய வாயடைத்துப் போகும்—ஏனெனில், தெற்கே நேரிட்ட கொடுமைக்கு, வடக்கு வாரி வாரிக் கொடுக்கிறது—என்கிறார் நிதியார். பாபம்! நமது வாயடைத்துப் போகவேண்டும் என்பது அவருடைய நீண்டநாள் ஆசை. அந்த ஆசை மேலிட்டு இப்படிப் பேசுகிறார்—ஆனால், நிலைமையை அவர் அறிய முயற்சிக்கவில்லை — ஒருவேளை முயன்றும் முடியவில்லையோ என்னவோ! மதிக்கும் அவர் அமைச்சராக்கப்பட்டிருப்பதால் உண்மை நிலையை அறிய அவர் முயற்சித்துப் பார்க்கலாம்—முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்றோர் முதுமொழி உண்டல்லவா!

தெற்கிலே அவதி, அதற்கு வடக்கு வாரி வழங்குகிறது! இது தேனாக இருக்கிறது, அமைச்சருக்கு; தெற்கே எழுந்த அவதி துடைக்கப் படுகிறது என்பதால் அல்ல, நமது வாய் அடைக்கப்படும் என்பதால்! எவ்வளவு சிறுபிள்ளைத்தனமான எண்ணம் என்று சொல்லத் தோன்றுகிறது, ஆனால் நான் வயதில் அவ்வளவு பெரியவனல்ல என்பதால் சொல்லக் கூசுகிறது.

வடக்கு வாரி வழங்குகிறது என்றால், வடக்கே உள்ளவர்கள் பதைத்தெழுந்து, பலமுனைகளிலும் நிதி திரட்டிக் குவித்து இங்கு அனுப்பியுள்ளனர் என்று எண்ணிவிடச் சொல்கிறார்போலும்!!

இன்றுவரை, அதுபோன்ற முயற்சியில், வடக்கே உள்ள பெருந்தலைகளும் ஈடுபடவில்லை, மக்கள் மனமும் உருகிடக்காணோம். உருகாதது கண்டு நாம் யாரும் ஆச்சரியப்படவுமில்லை.

தமிழகத்தில் இந்தத் தத்தளிப்பு என்று கண்டதும், கடல் கடந்து சென்றுள்ள தமிழர்களுக்குக் கண்ணீர் கொப்பளிக்கிறது மலாயாவில் நிதி திரட்டுகிறார்கள்.

காபூலிலும் கராச்சியிலும் எந்த அளவுக்குக் கருணைபிறக்குமோ, அதே அளவிலேதான் கல்கத்தாவிலும் டில்லியிலும் பிறந்திடக் காண்கிறோமேயன்றி பீகார் பூகம்பம் அசாம் வெள்ளம் ஆகியவற்றின் போது, தெற்கே உள்ள மக்கள், 'குடும்ப பாசம்' கொண்டோர் போலாகி பணத்தைத் திரட்டி அனுப்பினார்களே, அதுபோல இதுபோது வடக்கே, யாரும் கிளம்பிடக் காணோம்.

வடக்கே அமைந்திருக்கிற சர்க்கார், பண உதவி தருகிறது என்றால், அது கருணையுமல்ல, கனிவுமாகாது, கடமை-வேறென்ன? நமக்கும், துரைத்தனமாக இருக்கிறது, நமது வரிப்பணத்தையும், தோலை நீக்கிச் சுளையாகக் கொண்டு செல்கிறது. வாழ்விலே வளம் பிறக்கத் தக்க வழியை எல்லாம் தன் கரத்தில் வைத்துக் கொண்டிருக்கிறது, செல்வப் பெருக்கத்துக்கான வாய்ப்பு அவ்வளவும் தன்னிடம் வைத்துக்கொண்டு இருக்கிறது. இந்நிலையில், இயற்கையாய் விளைந்துள்ள கோரமிகுந்த இடர்ப்பாட்டிலே சிக்கி நாம் சீரழியும் போது பணம் தர வேண்டிய பொறுப்பு கூடவா கிடையாது. இதைச் செய்வதால் வடக்கு தெற்கு என்ற பிரச்சனை எப்படி நின்றுவிடும்? வாயடைத்துப் போகுமோ!! என்ன மந்த மதி? கூர்ந்து பார்க்கும்போது, வடக்கு – தெற்கு என்பது பற்றிய பிரச்சினையின் உண்மையல்லவா, மேலும் பளிச்செனத் தெரிகிறது. நமது தமிழகத்தில் ஒரு பெரும் விபத்து நேரிட்டிருக்கிறது இலட்சக்கணக்கான மக்கள் துயருற்றுக் கிடக்கின்றனர், கோடிக் கணக்கில் பொருள் நஷ்டம், உயிர்ச்சேதம் உள்ளத்தை வேக வைக்கும் அளவில், ஐயோ! என்று அலறும் மக்களுக்கு ஆறுதல் அளிக்க, எல்லாம் இழந்தோமே ஏது மற்றவர் ஆனோமே என்று கதறும் மக்களைத் தேற்ற, பிணக்காடாகிப் போன நஞ்சையை மீட்டிட, ஊர்களை வெள்ளக் காடுகளிலிருந்து வெளியே கொண்டுவர, வீடிழந்தோருக்கு ஓர் குடில் அமைத்துத்தர, இவைகளுக்கான பெரும் செலவுக்கான பணம் நம்மிடம் இல்லையே! தங்கம் விளையும் நாட்டிலே, இதற்குப் பணம் இல்லையே, ஏன்? செல்வம் கொழிக்கும் நாடுதானே, இயற்கை அமைப்பின் படி இங்குள்ள நாம், கையேந்தி

(14-ம் பக்கம் பார்க்க)

தொடர் சித்திரம்

# அறுவடை

2

**வா**சற்படியிலிருந்தபடி வீதியை எட்டிப் பார்த்தாள் அங்கெல்; அவர்கள் ஓடிவந்துகொண்டிருந்தார்கள். அவளது மனம் துடித்தது. "மாடிப் படிகளில் ஏறி, மேலே போ; ஊம், சீக்கிரம், சீக்கிரம்" என்ருள். பெண் உள்ளம் எத்தகையது என்பதை அவள் காட்டிக்கொண்டுவிட்டாள். அவன் இருட்டோடு இருட்டாய் மேலே பறக்கலாஞன்.

"நில்" என்ருள், அதட்டும் குரலில். பயம் அவனைக் கப்பிற்று. "இந்தா! இதைக் கொண்டு போ. மேலே உள்ள அறையில் போயிரு" என்று சொல்லியவண்ணம் கூடைக்காரியிடம் வாங்கிய முட்டை, ரொட்டி முதலியவைகளை அவனிடம் கொடுத்துவிட்டு, இரண்டு கதவுகளையும் திறந்துகொண்டு; கூட்டத்தை எதிர்நோக்கத் தயாராஞள்.

அதற்குள், ஆத்திரத்தோடு தடி, கத்தி சகிதம் ஓடிவந்த கும்பல், தெரு மூலையிலிருந்து திரும்பி, 'எங்கே ஓடிவிட்டான் அவன்?' என்கிற திகைப்பில், இங்குமங்கும் பார்த்தது. தப்பிவிட்டான்;-இல்லை, எங்காவது மறைந்துகொண்டிருப்பான்! —என்று, எவ்வொருவரும் தத்தம் சித்தம் போனபடிக் கத்தினர்கள். அனைவரது பார்வையும், கதவைத் திறந்துகொண்டு நிற்கும் அங்கெல் மீது பாயவே, அவளிடம் ஓடிவந்தனர். கூட்டத்திலிருந்த ஒரு மனிதன் அவளைப் பார்த்துக் கேட்டான், "எங்கே போஞன், அந்தப் பயல்?" அவனைப் பார்த்தபோது, அங்கெலுக்குப் பயமாக இருந்தது. அவ்வளவு பயங்கரமாயிருந்தது, அவன் தோற்றம். சீவப்படாத தலை; பஞ்சடைந்த கண்கள்; ஏழ்மையின் கூடு அவன்!—அதோடு வெறியும் ஏமாற்றமும் கலந்தால் எப்படி இருக்கும்?

"யாரைக் கேட்கிறீர்கள்? யாரை ஐயா தேடுகிறீர்கள்?"—என்று துணிவை வரவழைத்துக்கொண்டு கேட்டாள், அங்கெல். தான் நடிக்க வேண்டிய நாடகத்தை மீண்டும் ஒரு முறை மனதுக்குள் ஒத்திகைப் பார்த்துக்கொண்டு, அவர்களைச் சமாளிக்கத் தயாராஞள்.

"யாரைத் தேடுவோம், நாங்கள்? ஊம், யாரையம்மா தேடுவோம்......" என்ருன், அந்த ஆள் — கேலியோடு. அதற்குள், கூட்டத்திலிருந்த இன்னொருவன், "யார் ஏழைகளின் எலும்பின்மீது மாளிகை கட்டிக்கொண்டு வாழ்கிருனே-எந்த மனிதன் தன் சுகபோகத்துக்காக நம்மையெல்லாம் படாதபாடுபடுத்துகிருனே —அவனை, அந்த அக்கிரமக்காரனை, பிரெஞ்சு நாட்டுப் பிரபுவைத் தேடுகிருேம்; எங்கே அவன்?" என்று கேட்டான், புயலைப்போல.

அவன் பேச்சு, அங்கெலைக்கூடக் கொஞ்சம் கலக்கியது. அதற்குள், கூட்டத்திடையேயிருந்து ஒரு பெண்மணி முன்வந்தாள். அவளுடைய கையில், ஒரு கத்தி இருந்தது. என்ன ஆச்சரியம் – ஏழ்மையால் பட்டபாடு, அந்த ஏந்திழையாளைக்கூட எவ்வளவு கொடூரமாக்கியிருந்தது? கத்தியை நீட்டி நீட்டி அவள் பேசிஞள், "நாட்டின் நரம்புகளாகிய நாம் – கற்பிளந்து மலை பிளந்து கனிகள் வெட்டும் கரங்களையுடைய நாம் – நாடு வாழப் பாடுபடும் தேசபக்தர்களாகிய நாம் – குண்டடிகளையும் அடக்குமுறைகளையும் தாங்கத் தயங்காத நாம்—தவித்துத் தத்தளிக்கும்போது, உயிரோடு உலவுகிருனே உன்மத்தன்—ஊர் கெடுப்பவன்—அந்த நாயை, பேயைத் தேடுகிருேம்......" என்ருள், அவள், முரசொலி முழக்குவதுபோல.

அரங்கண்ணல்

"பழிக்குப் பழி வாங்கவேண்டும் அம்மா! நம் நாட்டை உறுஞ்சிக் கொழுத்த அவனுடலை, நாய்க்கும் கழுகுக்கும் விருந்தாக்கப்போகிருேம்"—என்ருன், இன்னொருவன்.

"எங்கே என்று கேளடா"

"ஒளிந்திருப்பான், கழுதை"

"பணக்காரனல்லவா? பயந்தாங்கொள்ளித்தனம் கூடப்பிறந்ததாயிற்றே!"

இத்தனை அமர்க்களங்களுக்கிடையே ஒரு காரியவாதி கேட்டான், "ஏன் இத்தனைக் கூச்சல்? ஏம்மா! நீ அந்தப் பயலைப் பார்த்தாயா? இல்லையா?" இன்னொருவன் அவனை முந்திக்கொண்டு வந்து சொன்னான், "எப்படி உன் கண்ணில் அவன் படாமலிருக்கமுடியும்? ஏம்மா! நீ, பார்த்தாய்—இல்லையா?"

',இல்லை! நான் யாரையும் பார்க்கவில்லை, ஐயா. இப்பொழுதுதான், மாடியிலிருந்து இறங்கிக் கீழே வந்தேன். ஏதோ கூச்சல் கேட்கிறதே என்னவென்று பார்க்கலாமென்று வந்தேன்"

அவளுடைய பதில் அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. கத்திவைத்திருந்த பெண்மணி எல்லோரையும் தள்ளிக்கொண்டுவந்து சொன்ஞள்.

"அவனை மறைக்கவேண்டிய அவசியம் உனக்கு இருக்க முடியாது. ஏனென்ருல், நீ பிரபுக்குலமல்ல. உரமேறிப்போன உன் உடலையும் உழைப்பால் கரடு முரடாகியிருக்கும் உன்னுடைய கரங்களையும் பார்க்கும்போது, எனக்கு அந்தச் சந்தேகம் உண்டாகவில்லை" என்று கத்தியை நீட்டி நீட்டிப் பேசிய அவள், எல்லோரையும் பார்த்து, "இந்த அம்மா பொய் சொல்லுவாள் என்ரு கருதுகிறீர்கள்? அவளுடைகளைப்பார்த்தால் பணக்காரியாகவா தெரிகிறது! பாருங்கள் அவள் முகத்தை—எவ்வளவு சாந்தமாயிருக்கிருள். பணக்காரி இப்படியா இருப்பாள்? அவளைப் பார்க்கும்போதே தெரியவில்லையா — தாய்நாட்டு மண்ணுக்காகப் பாடுபடும் லட்சோபலட்சம் மங்கையர் திலகங்களில் ஒருத்தி என்று. நிச்சயம், கொடுமை களைய வந்த வீராங்கனைகளில் ஒருத்தியே இவள்! வெற்றிச் செல்விகளில் ஒருத்தியே இவள்!" என்று கூவிஞள்.

ஆத்திரம் எவ்வளவு இருந்ததோ, அந்த அளவுக்கு அன்புமாரி பொழித்

தனர் அவள்மீது. ஏழை மக்களின் உள்ளமே இப்படித்தானே! விரோதி யென்றால் வேங்கைபோலாவதும்—வேண்டியவர்களைக் 'க ட வு ளு' க்கு அடுத்தபடியாக்குவதும்தானே, அவர்கள் சுபாவம்!! கொஞ்ச நேரத்துக்கு முன், தமது ஆத்திரத்தைக் காட்ட ஒரு ஆள் தேவைப்பட்டது—அந்த ஆளில்லை யென்றதும் இப்போது இவள்மீது அன்புமழையைப் பொழிகின்றனர். புயல் அல்லது தென்றல்! என்ன விசித்திரமான மனோபாவம்!!

* * *

என்ன செய்வதென்று அங்கெல் திகைத்துக்கொண்டிருந்த அந்தநேரத்தில், விடால், மாடியிலிருந்து இறங்கி வந்தான்-கூட்டத்தையும் எதிரே தன் மனைவி பதில்கள் சொல்லிக்கொண்டிருப்பதையும் கண்ட அவனுக்கு எதுவும் விளங்கவில்லை "என்ன இது? ஏனிங்கே கூட்டம்?" என்று ராணுவ மிடுக்கோடு கேட்டான். அவன்மிடுக்கும் அதிகாரக் குரலும் அ வ ர் க ளை என்னசெய்யமுடியும்? பழைய மக்களா! அல்லவே, சுதந்திரப் பிரஜைகளாயிற்றே!

அ த னா ல், "யார் இவன்? அதிகாரத்தோடு, நாட்டை ஆக்கவும் அழிக்கவும் வல்லமை பெற்ற மக்களாகிய நம் முன்னிலையில் பேசுகிறானே? ஊம்! இவனையும் அனுப்பவேண்டியதுதான் பலிபீடத்துக்கு!!" என்று முணுமுணுக்கலாயினர்.

விடால், கோபமடைந்தான், 'இது தானா, உங்கள் நாட்டைக் காக்கப் போராடும் ஒரு வீரனுக்குக் காட்டுகிற நன்றி? என்னையும் என் மனைவியையும் ஏன் அவமதிக்கிறீர்கள்? எங்களுடலில் மட்டும் தேசபக்தி இல்லையா?" என்று சப்தம் போட்டுச் சொன்னான்- அவனுடைய குரலும், அதில் அடங்கியிருந்த மிடுக்கும், உருவும் திருவும், அவர்களை மிரளச்செய்தன, ஆனால், கத்திவைத்திருந்த பெண்மணி மட்டும், அஞ்சவில்லை, "அதட்டி பேசாதே ஐயா. நீர் ஒரு அ தி கா ரி யெ ன் றா ல், எங்களுக்கென்ன? பழையகாலம் என்று எண்ணமோ! சுதந்திர நாட்டில் எல்லோரும் ஓர்குலம்—எல்லோரும் ஓரினம், தெரியுமா? இங்கே, ஒரு பிரபு ஓடிவந்துவிட்டான்! அவனை மறைத்து வைத்திருக்கிறாயென்று உன் மனைவியைக் கேட்டோம்" என்றாள்.

சிறிது நிமிடத்துக்குமுன் அவள் தான் அங்கெலைப் போற்றியவள்! இப்போது தங்களை அடங்கிப்போகும்படி ஒருவன் பேசுகிறான் என்றதும், 'சமத்துவக் குரலில் சண்டமாருதமெனப் பேசினாள்!!

"என்ன துணிச்சல்! குடியரசுக்காக, கொடுமைகளையெதிர்த்துக் குருதி கொட்டுகிறேன் நான் — என் மனைவி, சுதந்திர விரோதிக்கு அடைக்கலம் தந்தாளா? இந்த விடாலையும் அவன் மனைவியையும் அவ்வளவு சாதாரணமாகவா நினைத்துக்கொண்டீர்கள்? உங்களைப்போல எ ங் க ளு க் கு ம் உணர்ச்சி உண்டு. ஒரு பி ர பு வை ஒளித்துவைத்திருக்க இந்த விடாலா அனுமதிப்பான்? அப்படிச் செய்ய வேண்டுமென்று என்மனைவி நினைத்தால்கூட, அவளைச் சுட்டுப் பொசுக்கி விடுவேன். தெரியுமா?" என்று கர்ச்சித்தான்.

அங்கெலோ, கணவனின் வார்த்தைகளைக் கேட்டு நடுங்கலானாள். அவளைப் பார்த்த விடால், 'போ, உள்ளே!' என்று கட்டளையிட்டான். மி ர ளு ம் விழிகளுடன் அவள் மேலே செல்லக் கிளம்பினாள். எந்த சுதந்திர வீரனும், அவன் வார்த்தைக்கு அட்டி சொல்லவில்லை! மாடிப் படிகளில் பீதியோடு ஏறிச்சென்ற அங்கெல், அறைக்கு வெளியேயிருந்த ஒரு மூலையோடு மூ லை யா ய் ஒட்டிக்கொண்டிருந்த 'அவனை'க் க ண் டா ள். 'பேசாமல் உள்ளே, வா!' என்று சைகை செய்துவிட்டு அறைக்குள்ளே போ னா ள். கீழே,விடால் ஏதோ இரைந்துபேசிக் கொண்டிருப்பதும் — மக்கள், அவன் வார்த்தைகளைக் கேட்ட பிறகு சப்தம் போட்டுக்கொண்டு கலைந்து செல்வதும் கேட்டது!

'ஓடி வந்தவனை' ஒரு சோபாவில் உட்காரச் சொல்லிவிட்டு, அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் உள் அறைக்குள் சென்றாள். இருட்டும், நன்றாகப் பரவியது.

## 2

**உ**ள்ளே சென்ற அங்கெல் அந்த அறையின் சன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு, வி ள க் கு க ளை ஏற்றி வைக்கும் முயற்சிலீடுபட்டாள்.

சோபாவில் அமர்ந்துகிடந்த 'அவன்' கொஞ்ச நேரம் கழித்ததும் கை கால்களை உதறிக்கொண்டு எழுந்தான்.

"மிகவும் நன்றி. நீங்கள் காப்பாற்றியிராவிடில்..." என்றான்.

"அப்படியென்ன செய்துவிட்டேன். மனிதாபிமானமுள்ள பெ ண் ம ணி யொருத்தி செய்யவேண்டிய கடமையைத்தானே செய்தேன்"

"நீங்கள் உதவ முன்வந்தபோதே நான் புரிந்துகொண்டேன் நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை..."

"கடமையையும் கண்ணியத்தையும் உணர்ந்த ஒரு போர்வீரனின் மனைவி என்றுதானே...?"

"மிகவும் பா க் கி ய ம் செய்தவன், அந்த வீரன்!"

"என்ன?"

"இவ்வளவு அருமையான உள்ளம் படைத்த உ ங் க ளை மனைவியாகப் பெறும் வாய்ப்பு கிடைத்தவன் நிச்சயம் பாக்கியசாலியாகத்தானே இருக்க முடியும்?"

இதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல், விளக்கு ஏற்றுவதிலேயே அவள் கண்ணும் கருத்துமாயிருந்தாள்.

"இந்நேரம் அவர்கள் போயிருப்பார்கள்—இ ல் லை யா?" — அ வ ன் கேட்டான்.

"போயிருக்கலாம்! இ னி மே ல் நீங்கள் எதற்கும்பயப்படவேண்டாம்" என்று பதில் சொன்ன அவளுக்குத் திடீரென அவன் வசம், கூடைக்காரியிடம் வாங்கியவைகளைக் கொடுத்தோமே என்கிற கவனம் வந்தது. 'எங்கே?' என்று கேட்டாள். இதோ, மேசையின் மீது இருக்கிறது, என்று பதில் சொன்னான், அவன்.

விளக்கைக் கொளுத்திய அவள், அப்போதுதான் திரும்பினாள்; மேசையின்மேல் இருக்கிறதா என்று பார்ப்பதற்காகத் திரும்பினாள்! வெளிச்சத்தில், அவனும், அவள் முகத்தைப் பார்த்தான். அவளும், அவனுடைய முகத்தைப் பார்த்தாள். இருவரும் கொஞ்சநேரம் ஒருவரை ஒருவர் வெறிக்க வெறிக்கப் பா ர் த் து க் கொண்டே நின்றனர். அவளுக்கு ஒரே திகைப்பு! அவனுக்கோ ஒரே வியப்பு!! அவன், எப்படி இங்கே வந்தான்? —அவள், நினைத்தாள்.

"ஆகா!சற்றும்எதிர்பார்க்கவில்லையே நான்?"—என்று அவன் ஆச்சரியப்பட்டான்.

திகைப்பால் குழம்பிப்போன அவள் கேட்டாள், "நீயா?"

அவன் களிப்புக் கலந்த குரலோடு கூவினான், "அங்கெல்!"

* * *

அவளுடைய சிந்தனை வெகு வேகமாகச் சுருண்டு ஓடலாயிற்று. பத்து ஆண்டுகளுக்கு முன்பு, அ வ ளு க் கு வயது ப தி னே ழு நடந்துகொண்டிருந்தபொழுது அவளைக் கொத்தத் துடித்தவன் அவன். பி ரா ன் சி ன் உள்நாட்டிலே இருந்த ஒரு ஊருக்குக் கோமான். அங்கெலோ, குடிபடைச் சாதி. அ வ ளை ஓரிடத்தில் கண்டான்; கண்டதுமே காதல்கொண்டான். பிரபு ஒருவனுக்குப் பேடை ஒன்றின்மீது ஆசை பிறந்துவிட்டதென்றால் தப்பமுடியுமா? அ து வு ம், அ ந் த க் கா ல த் தி ய பிரான்சில்! ஆ ள ம் பு க ள் பறந்தன-வைரங்கள்

பொங்கல் மலர்

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

பொங்கல் மலருக்குரிய முழுத் தொகையையும் (கழிவு நீக்கி) அனுப்பிய ஏஜண்டுகளுக்கு மட்டுமே, அவர்கள் அனுப்பிய பணத்தின் அளவுக்கு மலர் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், 1-1-56ல் அனுப்பப்படும் டிசெம்பர் மாதப் பட்டியல் தொகையை 5-1-56க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்
"திராவிட நாடு"

காட்டப்பட்டன — மாளிகையின்மீது மந்தகாசமாக உலவலாம் என்று அவளிடம் சொன்னார்கள்-அந்த ஊருக்கே இராணிபோல வாழ்ந்திருக்கலாம் — ஆனால், அது அத்தனையையும் அவள் விரும்பவில்லை; தூசென மதித்தாள். ஏனெனில், அவளுடைய இதய சாம்ராஜ்யத்திலே, இதற்குமுன் இன்னொருவன் அமர்ந்து ஆட்சிபுரிந்து கொண்டிருந்தான். அவன்தான் விடால். ஏழைதான் அவன்; என்றாலும், அந்த ஏந்திழை, 'அவனுடைய கால் தூசும் சரி, கனவானிடம் இருக்கும் கனகமாளிகைகளும் சரி' என்று எண்ணினாள். அதனால், கள்ள வழிகளைக் கையாள ஆரம்பித்தான், சிராக் பிரபு—அதுதான் அவன் பெயர். சராசரி இதுபோன்ற நேரங்களில் எத்தனைவித உபாயங்களைப் பணம்படைத்தோர் செய்ய முயல்வார்களோ, அத்தனையையும் செய்தான். உருட்டல்-மிரட்டல் - அதட்டல் — கணைகள் யாவும் சரமாரியாகக் கிளம்பின. ஏளனத்தோடு பார்த்தாள், அவள். விடாலின் புன்னகை, அவளுக்குப் போதையையும் தைரியத்தையும் ஊட்டியது. சிராக்குக்குப் பணிய மறுத்தாள். தொல்லைகளைப் பொறுக்க முடியாமல், விடாலும் அவளும் பறந்தனர், பாரிஸ் பட்டணத்துக்கு. பத்தாண்டுகளுக்குப் பிறகு! இப்போது, எந்த சிராக் பிரபு அவர்களுக்கு ஈட்டியாகவும் வேலாகவும் இருந்தானோ-அவனுடைய உயிர் அவளால் காப்பாற்றப்பட்டுவிட்டது! இப்போது, அவள் விரும்பினால், அவனைப் பழிக்குப் பழி வாங்கலாம்—விடாலிடம் சொன்னால் போதும்; உடனே அந்தப் பிரபு, பலி மேடைக்குத்தான் அனுப்பப்படுவான். விடாலின் கண்ணசைவு போதும், அவனைச் சுக்குநூறாக்க. ஏழை—மோழை — கூலிக்காரன்—பிச்சைக்காரப் பயல்—என்றெல்லாம் ஒரு காலத்தில் யாரைப் பேசினானோ அவனுடைய கையிலே, சிராக் பிரபுவின் உயிர் இருந்தது. அதை எண்ணிப் பார்த்த பொழுது புலியின் வாயிலிருந்து சிங்கத்தின் குகைக்குள் வந்து சிக்கிவிட்டதுபோலப் பயந்தான்.

"அங்கெல்! என்னைக் காட்டிக் கொடுத்துவிடமாட்டாயே. பழிக்குப் பழி வாங்கும்படிச் செய்யமாட்டாயே'' என்று பரிதாபத்தோடு கேட்டான், "உன்மீது நான் கொண்ட தூய்மையான காதலால்தான் அவ்வளவு தொல்லைகளையும் தந்தேன். காதலுக்காகப் பித்தனானேன், அன்று! என்னை மன்னித்துவிடு. ஒரு காலத்தில் உனக்காக இந்த உலகத்தையேத் துறக்கச் சித்தமாயிருந்த உண்மைக் காதலனை என்னை மன்னித்துவிடு, அங்கெல், மன்னித்துவிடு'' என்பதாகக் கெஞ்சினான். அங்கெல் அவனுடைய வார்த்தைகளைக் கேட்டதும், கோபமாகப் பார்த்தாள், "பேசாதே!" என்று அதட்டினாள்.

"சிராக் பிரபுவே! ஒரு காலத்தில், உன் பிடியில் என்னைச் சிக்கவைக்கப் படாத பாடுபட்டாய். இன்றோ, எதிர்பாராத நிலையில் என் கையில் சிக்கிவிட்டாய். ஏழை என்பதால் என் கற்பை பலி கொள்ள முனைந்தாயே — இப்போது அதே ஏழையின் இருதயம் எப்படிப்பட்டதென்று நீயே தெரிந்துகொள்ளலாம்!'' என்றாள். கோபம் கொந்தளித்த அவளைப் பார்த்ததும், நடுநடுங்கிப்போனான் சிராக். அதே சமயத்தில், கீழே கதவுகள் சாத்தப்படும் சப்தமும் யாரோ மாடிமீது ஏறி வருகிற ஓசையும் கேட்டது.

"அங்கெல்! கீழே, எப்படிப்பட்ட ஆபத்துக்கு நான் இரையாக இருந்தேன் என்பதையும் என்னைக் காப்பாற்ற முனைந்ததால் நீ எவ்வளவு பெரிய ஆபத்துக்கு ஆளாகயிருந்தாய் என்பதையும் நான் மறக்கவில்லை. அங்கெல்! உன்னிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கும் என்னை எதுவேண்டுமானாலும் செய்யலாம். அதோ, உன் கணவன் வரும் ஓசையும் கேட்கிறது. என்னைப் பிடித்துப் புரட்சித் தலைவர்களிடம் ஒப்படைத்தால், உனக்கும் உன் கணவனுக்கும் கீர்த்தியும் கியாதியும் ஏற்படும். அப்படிச்செய்ய நீ விரும்பமாட்டாய் என்றே நம்புகிறேன் — உன்னுடைய இளகிய மனம் அதற்கெல்லாம் துணியாது. ஆனால், நான் தயாராக இருக்கிறேன். ஒரு காலத்தில் உனக்குச் செய்த கொடுமைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமாக என்னுடைய உயிரைத் தரச் சித்தமாயிருக்கிறேன்'' என்று பேசினான். உள்ளத்தில் விஷமும் உதட்டில் அமுதமும் கலந்து அவன் உருட்டி எரிகிறான் வார்த்தைகளை என்பதை அங்கெல் உணரவில்லை! அவனுடைய கண்ணீர் கலந்த வார்த்தைகளைக் கேட்டதும், அவள் மனம் உருகலாயிற்று! ஏழைப் பெண்ணாயிற்றே? இரக்கமும் தியாகமும் ஏழைகளின் பரம்பரைச் சொத்தாயிற்றே!

அவனுடைய கெஞ்சும் குரல் கேட்டு, அவள் ஒரு முடிவுக்கு வருமுன், கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டது—வெளியே, புரட்சிக்காரர்களிடம் தன் மனைவிக்காகத் தீப்பொறியெனச் சீறி வாதாடிய விடால் அறைக்குள் நுழைந்துகொண்டிருந்தான். என்ன ஆகுமோ! என்ன சொல்வானோ! — என்கிற கவலைக்கு ஆளானவளாக, அங்கெல், திகைத்துப் போய்விட்டாள். கணவன், கேட்டால் என்ன சொல்வதென்று புரியவில்லை, அவளுக்கு.

* * *

அறைக்குள் நுழைந்த விடால், அவனைப் பார்த்ததும் திகைத்தான். சந்தேகம் கொள்வாரோ? ஒரு பிரபுவுக்கு அடைக்கலம் கொடுத்தேன் என்பதற்காகச் சீறுவாரோ? அல்லது சிராக் பிரபு என்பதால், ஏதோ பழைய 'பந்தம் தொந்தம்' காரணமாகக் காப்பாற்றினேன் என்று ஐயுறுவாரோ— என்று நடுங்கிக்கொண்டிருந்த அங்கெலைப் பார்த்தான். அவன்மீது வைத்தகண் வைத்தபடி, 'சரி, இன்று ஒழிந்தோம்' என்ற பயத்துடன் நின்றுகொண்டிருந்த சிராக் பிரபுவையும் பார்த்தான். பிறகு, இருவரையும் மாறி மாறி பார்த்தபடியே சிராக்கின் அருகில் போனான் — அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, அங்கெலின் பக்கம் திரும்பினான். 'அங்கெல்!'—அவன் குரலிலே கோபம் தொனித்தது. "அவர்கள் சொன்னது உண்மைதானா?"

"உண்மைதான் விடால்! ஆனால், ஓடிவந்து உதவிகேட்டது இவர் என்பது எனக்கு அப்போது தெரியாது"

விடால், வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்த மெழுகுவர்த்தியைக் கையிலெடுத்து சிராக்கின் முகத்துக்கருகே நீட்டிக்கொண்டே சொன்னான்

"சிராக் சீமானே! வழவழப்பாகயிருந்த உன்னுடைய கன்னங்களிலே காலம் தன்னுடைய சின்னங்களைச் சின்னஞ் சிறு கீறல்களாகப் பதித்துவிட்டுப் போய்விட்டது; ஆனால், அன்று நீ என்னுடைய இதயத்தில் உண்டாக்கினாயே காயம்—நாங்கள் ஏழையென்பதால் எங்களைப் படாதபாடு வைத்தாயே அந்த நினைவுகள் — இன்னும் ஆறிப்போய்விடவில்லை. இந்த இருதயத்தின் ஆழத்திலே இருக்கிறது" என்று கூவினான்.

குரலையும், அதிலே தொனித்த கோபத்தையும் கண்ட சிராக் பிரபு, நடுங்கிப்போனான். இந்த உலகில் வாழ்வதற்கிருந்த எல்லாப் பாதைகளும் அடைபட்டுப்போய்விட்டதாக எண்ணினான். அவனிடமிருந்து பார்வையைத் திருப்பிக்கொண்ட விடால்,

"அங்கெல்! இந்த அயோக்கியன் ஒண்ட நீ இடமளித்ததும் நல்லதாகவே போயிற்று. இவனுக்கும் நமக்குமிருந்த பகைக்கு இன்று ஓர் முடிவு கட்டிவிடலாம் அல்லவா?"

"விடால்!" என்பது தவிர வேறொன்றும் சொல்லவில்லை, அவள்.

"என்ன அங்கெல்? என்ன!"

"எய்த அம்பும், இறந்த காலமும் இனிமேல் வரவா போகின்றன, விடால்? போனதுபோகட்டும்! அவனைப் போன்ற அட்டகாசப் பிம்பங்களுக்கு, நாடு, பாடம் கற்பித்து வருகிறது—நமக்கேன் வீண்கஷ்டம், விடால்? ஒரு உயிரைக் கொல்வதால், என்னலாபம்! இவனைப்போல ஒருவனை நம்மால் உண்டாக்கிவிட முடியுமா!"

"தத்துவம் பேசுகிறாயா, அங்கெல்? இந்தத் தகாதவனைக் காப்பாற்றத் தத்துவமா பேசுகிறாய் என்னிடம்..."

"தத்துவமல்ல விடால்! நம்போன்றவர்களை வாட்டிய இவர்களை உயிரோடு, ஒரு நொடியில் கொன்று குவிப்பதைவிட 'அணு அணு'வாகச் சிதைத்துச்சித்ரவதை செய்யவேண்டும்';

"அப்படியானால், இவனைக் கட்டிப் போடுவோம். பட்டினிப்போட்டு அடி அடியென்று அடித்துச் சித்திரவதை செய்வோம்"

"அதுவல்ல, விடால். நான் சொல்லுகிறவழி — ஏழைகளின் இருதயம் என்றால் எப்படிப்பட்டது என்று இவர்களுக்குக் காட்டுவோம். கடவுளிடம் இல்லாத அன்புகூட, இல்லாதவர்களிடம் இருக்கிறது எனும் உண்மையை உணர்த்துவோம். விடால், எனக்காக உங்களை வேண்டுகிறேன்–இவரை வெளியே அனுப்பிவிடுங்கள் ........."

"என்ன?" திகைப்பும் வியப்பும் கலக்கக் கேட்டான் விடால் "இவனை வெளியே அனுப்பவா?"

"ஆமாம்! உங்களுடைய அங்கெல் மீதுள்ள அன்பும் பாசமும் உண்மையென்றால் இவரைக் கட்டாயம் நீங்கள் வெளியே அனுப்பத்தான் வேண்டும்"

"யோசித்துப்பார்அங்கெல்! உன்னையும்என்னையும்என்ன பாடுபடுத்தினான். ஊரைவிட்டு நாம் பாரிஸ் நோக்கி ஓட முயன்றதைக் கேள்விப்பட்டதும், எவ்வளவு இடையூறுகளை உண்டாக்கினான்......அவன் நமக்குச் செய்த கொடுமைகளுக்கு நாம் வஞ்சம் தீர்த்துக்கொள்ளக் கூடிய நல்ல சந்தர்ப்பத்தை நாசம் செய்யச்சொல்கிறாயே!"

"வஞ்சம் தீர்த்துக்கொள்வதால் நம்முடைய ஆத்திரம் அடங்கிவிடும். அவனை மன்னிப்பதன் மூலம் கிடைக்கும் ஆனந்தம் இருக்கிறதே சாகுமளவுக்கு நிலைத்து இருக்கும்..."

"ஆடியில் விதைத்தால் தைமாதம் அறுத்துத்தான் ஆகவேண்டும்! அறுவடைக் காலத்தில் மௌனியாகிவிட நாம் மகான்களல்ல—அங்கெல்!"

"கதிரை அறுப்பதால் உங்களுக்கும் எனக்கும் நன்மை உண்டு; பதரை அறுப்பதால் யாருக்கு லாபம் விடால்!"

"இவன் பதரல்ல! பாயும் வேங்கை-ஏமாந்தால் எல்லோரதுகுரல்வளையையும் கடித்துத் தின்றுவிடக்கூடிய நரி......"

"அவன் கொடுமைக்குத் தண்டனை வழங்க, சர்க்கார் தயாராக இருக்கிறது. நாம், ஏன், நம்முடைய கைகளை இரத்தக்கரையாக்கிக் கொள்ள வேண்டும்...?"

"என்ன சொல்கிறாய் அங்கெல்?"

"மன்னிப்பவன் மனிதன்; பழிவாங்குபவன் மிருகம். நாம் மனிதர்களாக நடந்துகொள்வோம் என்கிறேன். இவனையும் இவனைப் போன்றவர்களையும் வெளியிலே உலவவிட வேண்டும். உழைக்காமல் உல்லாசமாக இனி வாழ முடியாதப்பனே! இதோ—ஏர் கலப்பை: இந்தா, கோடரி! என்று கொடுத்து உழைக்கச் செய்யவேண்டும். அப்போதுதான் அவர்களுக்குத் தக்க தண்டனை அளித்தவர்களாவோம். நாம் துடிதுடித்ததைப்போல அவர்களும் துடிக்கவேண்டும்–அழவேண்டும்– அவர்களுடைய சதையும் நரம்பும் முன்புபோல வீங்காமல் ஆடி அசைய வேண்டும். அதைத்தான் நான் விரும்புகிறேன் — இவரைப் போன்றவர்களின் சதையும் நரம்பும் எதற்காக வீணுகவேண்டும்?"

விடால், ஒரு கணம் யோசித்தான். அவள் சொல்லுவது சரியென்றே பட்டது. சிராக்பக்கம் திரும்பி, "பிரபுவாக இருந்து, சாதாரணதுகளின் பட்டியலிலே சேர்ந்துவிட்டவனே! நீ காப்பாற்றப்பட்டுவிட்டாய். யாரை நீ கொடுமைப்படுத்த நினைத்தாயோ அவளால் உனக்கு உயிர்ப்பிச்சை அளிக்கிறேன். ஓடிப் போ இங்கிருந்து" என்றான்.

"உங்கள் பெருந்தன்மைக்கு மிக்க நன்றி" என்று அவனைப் பார்த்துக் கொண்டல்ல—அவளைப் பார்த்துச் சொல்லியவாறு கிளம்பினான், சிராக்.

அறையைத் தாண்டி, மாடிப் படிகளில் அவன் அடியெடுத்துவைத்ததும், 'தடால்' என்று ஒரு சப்தம் கேட்கவே, அங்கெலும் விடாலும் திரும்பிப் பார்த்தனர்.

(தொடரும்)

## ஆச்சரியம்! ஆனால் உண்மை!!

"இதேது! மனிதனைப்போலப் பேசுகிறது, பாடுகிறதே–இதற்குள் யாரோ ஒருவர் உட்காந்திருக்கிறார் போலும், அவர்தான் அப்படியெல்லாம் செய்கிறாராக்கும். அவருக்குச் சாப்பாடுபோட்டு வைத்துக் கொள்வதென்றால் யாரால் முடியும்?" என்று எண்ணினர் போலும், அந்தக் கிராமத்து மக்கள்! அமைச்சர் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லையாம் — கடைசியில், வானொலிப் பெட்டியை எடுத்துத் திறந்து காண்பித்த பின்னரே, நம்பினராம்!

மத்தியப் பிரதேசத்திலுள்ள பஸ்தார் மாவட்டத்திலுள்ள ஒரு குக்கிராமத்துக்கு சமூக நல அமைச்சர் சென்றிருந்தார் அந்தக் கிராமவாசிகளுக்கு, சர்க்காரின் சார்பில் இலவசமாக ஒரு வானொலிப் பெட்டியை அளித்தார். மக்கள், மறுத்துவிட்டார்கள், "எங்களிடம் உள்ள வசதியே மிகவும் கொஞ்சம், இதற்கு வேறு சாப்பாடுபோட யாரால் முடியும்" என்று கூறி.

அமைச்சர் திகைத்துப்போய் விட்டாராம்! பிறகு எல்லா விளக்கங்களையும் சொல்லி, அவர் தம் மனதில் உண்டான ஐயப்பாடுகளையெல்லாம் போக்கிய பிறகே, சம்மதம் அளித்தனராம்.

வானொலி சாப்பிடுமோ, என்று அஞ்சுமளவுக்கு அறியாமை மிகுந்துகிடக்கிறார்கள், மக்கள். இப்படிப்பட்டோர், நிரம்பிய இடங்கள் என்றுதான் அறிவொளி பெறுமோ, என்று ஏங்குகின்றனர் நல்லோர்! எத்தர்களோ, மூட நம்பிக்கையும், பழமைப் பாசமும் "எங்கே போய்விடுமோ?" எனும் அச்சத்தில் ஏதோ புதிய புதிய தத்துவங்களைக் கண்டுபிடித்த வண்ணமிருக்கிறார்கள்!! ★

# "கல்யாண மகால்!"

**அண்ணல்**

மன்றமோ, கூடமோ அல்ல, மகால் ஒன்று கட்டப்போகிறார்களாம்! கல்யாண மகால்!!

கட்டவேண்டியதுதானே? சாலையோரத்திலும், குந்த இடமில்லாத குடிசைகளிலும், கல்யாணங்களை வைத்துக்கொண்டு ஏழை எளியதுகள் படும் தொல்லை கொஞ்சமோ? இப்படி ஏதேனும் ஒரு மண்டபம் இருத்தல் நியாயம்தானே என்பீர்கள், ஐயன்மீர்! அந்த உயரிய நோக்கம், உங்களையும் என்னையும் பெற்றெடுத்த பரம்பரைக்கு இருக்கக்கூடியது — அதனாலேயே ஒட்டாண்டியுமானோர் நாம். அவர்கள் யார்? சாமான்யர்களா! சாதாரணதுகளின் பட்டியலில் சேரக்கூடியவர்களா!! அதனால் தெளிவாகவே தீர்மானம் செய்திருக்கிறார்கள், பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் நடத்துவதற்குப் பொதுவான கல்யாண மகால் கட்டுவதென்று!

உங்கள் விழிகள் மேலே செல்வது தெரிகிறது, எமக்கு—வியப்புக் குறி வேகமாக படர்வதை அறிகிறோம்—1955லா, இப்படியொரு தீர்மானமா, யாரந்தப் பேதம் விரும்பி, காட்டுவீர் எமக்கு, கதைக்காதீர், சாதி பேசி வாழ முடியுமோ, சட்டங்கள்மூலம் சாதிகளைக் கொட்டிட எண்ணும் சர்க்காரன்றோ இருப்பது என்று கனலும் திகைப்பும் கொண்ட உங்கள் கண்கள் சுழல்வது தெரிகிறது, நன்றாக—பு தர்க்கம் பேசவில்லை யாம். கூனிக் குறுகிப்போன மக்கள் மன்றம், சாதிக் கொடுமைகளைத் தகர்த்தெறிந்து, பேதாபேதங்களை அழித்து, உயர்வு தாழ்வெனும் அக்கிரமத்தை ஒழித்து, உத்தமப் பண்பும், உயர்ந்த நோக்கமும்கொண்ட புது யுகம் மலரவேண்டும்! அங்கே பூசுரனும் இரான், அவன் கூறும் அசுர குலத்தினனும் இரான், நூல் காட்டி பிழைப்போனும் இரான், நொந்த உள்ளத்தோனும் உலவமாட்டான் என்று ஊர்தோறும், ஒவ்வொரு நாளும் கூறி வருவோர் நாம்!—நம்மை சவாலுக்கு அழைப்பதுபோல, அறைகூவல்விட்டுள்ளனர் — பிராமண சமூகத்துக்காகக் கல்யாணமகால் கட்டவேண்டுமாம் —செய்தியைப்பற்றி ஐயமிருக்குமாயின், மதுரையிலிருந்து வெளிவரும் 'தமிழ்நாடு' (20–12–55) ஏட்டினைப் பார்ப்பீர். கல்யாண மகால் கட்டவேண்டுமென, மதுரையம்பதியிலே நடைபெற்ற பிராமண இளைஞர்சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவில் தீர்மானம் செய்திருக்கிறார்கள்!

இளைஞர்சங்கம் — என்றதும், ஏதேதோ நினைவுக்கு வரும். இளைஞர்கள் கிளப்பிய தீயால்தான், அக்கிரமத்தின் உச்சியிலே கிடந்த ஜார் மன்னன் சாய்ந்தான். ரஷ்யாவிலே லெனினும் ஸ்டாலினும் தோன்றினார்கள். சீனமண்ணிலே, குருதி வற்றிடும் பருவமடையாத வாலிபப் படைதான், வசீகரமான புதுவாழ்வைக் கொண்டுவந்து தந்தது. அப்படிப்பட்ட அற்புதமான ஒப்பற்ற பணியில், நாட்டைக் களிநடனச்சோலையாக்க அர்ப்பணித்திருக்கும் ஆயிரமாயிரம் இளைஞர்களை, நமது அணியிலும் பார்க்கிறோம். விஞ்ஞானக்கூடம், கல்விச் சாலை, ஆலை, தொழிலகம்—இன்னோரன்ன இடங்களிலே, எண்ணற்ற இளைஞர்கள், நாளைய உலகை உருவாக்க ஏதேதோ கற்கும் இன்றியமையாத பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்—உலகெங்கும். ஆனால், 'அந்த வட்டாரத்து' இளைஞர்கள் போக்கு எத்திசை செல்லுகிறது கண்டீரோ? கல்யாண மகால் கட்டவேண்டுமாம்! பிராமணர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் நடத்துவதற்காக, கட்டப்படவேண்டுமாம்!

காலப் புயல், எத்தனையோ நிகழ்ச்சிகளை, உதறிவிட்ட வண்ணம் வேகவேகமாக அடித்துக்கொண்டிருக்கிறது—அதற்குத் தக்கவாறு நாமும் நடக்கவேண்டும் பத்தாம்பசலிக் கொள்கையை இன்னும் கடைப்பிடிப்பது எத்தனின் செயல்—பித்தன் என்று பிறர் தூற்றும் நிலையேற்படக்கூடும், ஆகவே அறிவுப் பணிகளைச் செய்வோம் என்று, முன்வரும் பல பார்ப்பனகுல இளைஞர்களை, நாம் சந்திக்கிறோம். சாதிக் கேடுகளை, சனாதனிகள் புரட்டினை, வேதாகமங்களின் சமாதி நிலையை, நாம் விரும்பிச் செல்லும் புது யுகத்தின் இன்பக் காட்சிகளை, கம்யூனிஸ்டுக் கட்சியிலே இருக்கும் ராமமூர்த்தியிலிருந்து காங்கிரசுக்குள்ளிருக்கும் இராஜகோபாலன் வரை, பேசும்போதும் எழுதும்போதும், மகிழ்கிறோம்— அவர்தம் உள்ளத்தையும் வாழ்த்துகிறோம். உயரிய நோக்கம்கொண்டோரின் அறிவுத் தெளிவினை, மாற்றுக் கூடாரத்திலிருப்போர் என்பதற்காக நாம் சந்தேகித்ததில்லை— அவர்களையெல்லாம் சவாலுக்கு இழுப்பதுபோல இருக்கிறது, மதுரை பிராமணர் இளைஞர் சங்கத்தின் போக்கு!

பிற இயக்கங்களில் என்று மட்டுமல்ல, எந்த வகுப்பினரால் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகிக் கிடக்கிறதோ அந்த அறிவியக்கத்தி

லும் பல பார்ப்பன இளைஞர்கள் பவனி வரும் காட்சியினைக் காண்கிறோம்—பூணூலை அறுத்தெறிந்து! புரட்டர்களின் போக்கினைக் கண்டித்து! அகமகிழும் வகையில் ஏற்பட்டுள்ள இந்தப் புது நிலை, சமூகத்தை பன்னெடுங்காலமாகக் கப்பிக்கிடக்கும் சாதிச் சண்டைகளை ஒழித்து, யாவரும் சமமெனும் புது நிலையை உண்டாக்கப் பயன்பட வேண்டும், எண்ணற்ற பார்ப்பன குல இளைஞர்கள், அறிவுப் பணிகளில் ஈடுபட வேண்டும்—அவர்தம் தொகை வளரவேண்டும், என்று மனமார விரும்புகிறோம். அந்த ஆசையால்தான், செல்லுமிடந்தோறும் "பார்ப்பன இளைஞர்காள்! பகுத்தறிவுப் பாதையினைப் பாரீர்—அதன் வழி வாரீர்!" என்று அறைகூவி அழைக்கிறோம். இருந்தும், மதுரைமா நகரில் பிராமண இளைஞர் சங்கமாம்! ஆண்டு விழாவாம்! இப்படியொரு 'தீர்மானமாம்!

* * *

ஆண்டு இரண்டிருக்கும்—சென்னை மயிலையம்பதியிலே நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டமொன்றிலே, தி. மு. க, முன்னாள் பொதுச்செயலாளர், தெரிவித்தது உங்களில் பலருக்கு கவனமிருக்கலாம், "பார்ப்பனகுல இளைஞர்களே! உங்களுக்கு விரோதிகள் வெளியிலே இல்லை; உங்கள் இனப் பெரியவர்கள்தான். வளர்ந்து வரும் புது நிலைக்கு அவர்களே முட்டுக்கட்டைப் போடுகிறார்கள்" எனும் பொருள்பட. மதுரை பிராமண இளைஞர் சங்க நிகழ்ச்சியைக் கண்ணுற்றதும், அந்த எச்சரிக்கையே கவனத்துக்கு வருகிறது. ஏனெனில், பத்தாம்பசலிகள், புதுக்கோலம் பூண்டு தமது சனாதனத்தைக் காத்துக்கொள்ள சல்லடம் கட்டுகிறார்கள் —அதன் அறிகுறியாகவே, வயோதிகர் சங்கம், சனாதன சதஸ், என்று அமைத்தால், ஆகா! எனக் கைகொட்டிச் சிரிப்பரோ எனும் வெட்கத்தால், இளைஞர் தம் பெயரால் சங்கங்களைத் துவக்கி ஏறுமாறான செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கே. பாஷ்யம்—இளைஞரல்ல!—தீவிர காந்தியவாதி, எம். எல். சி-யாக இருப்பவர், சாதிகளை ஒழிக்கும் சமரச நோக்கம் கொண்டதெனக் கூறப்படும் காங்கிரஸ் கட்சிக்காரர்—ஆப்பிரிக்காவிலே வெள்ளையன், நிறபேதம் காட்டி நடாத்தும் அக்கிரமத்தினைக் கண்டித்துப் பேசும் போது வயோதிக நிலையிலும் கனல் கிளம்பும், பேச்சில்—அத்தகைய பெரியவர்தான், மேற்படி சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கினாராம்! அவரிடம், நாடு எதனை எதிர்பார்க்கும்? இப்படியொரு பூசல் உள்ளதே, தென்னாட்டில்—பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பேதம் வளர்ந்துகிடக்கிறதே—இது ஒழிய முடியுமா—ஒற்றுமை மார்க்கம் ஏற்பட ஏதேனும் வழி கிடைக்குமா, என்பதனைத்தானே, எதிர்காலம் பற்றிக் கவலைகொள்ளும் பார்ப்பன குல இளைஞர்கள் எதிர்பார்ப்பார்கள்—ஆனால், அவர் அங்கே என்னபோதனை செய்துள்ளார் தெரியுமா? "பிராமண இளைஞர்களையும், பெண்களையும் வேதம் சாஸ்திரம் ஆகியவைகளைப் படிக்கத் தூண்டவேண்டும். நாட்டியம் தெரியுமா? பாடத்தெரியுமா, ஆங்கிலம் பேசுவாளா, என்றெல்லாம் தற்போதைய மணப் பெண்ணைக் கேட்கும் வழக்கம் மாறி, பெண்ணுக்கு சமஸ்கிருதம் தெரியுமா? வேத சாஸ்திரங்கள் தெரியுமா? என்ற கேள்வியைக் கேட்கும் நிலை ஏற்படவேண்டும்! அப்போதுதான், பிராமண சமூகம், ஒற்றுமையும் முன்னேற்றமும் அடைந்துவிட்டது என்று எண்ணலாம்"

எப்படியோசனை? ஆண்மட்டும் வேதசாஸ்திரங்களைப் படித்தால் போதாதாம்! பெண்ணும் கற்க வேண்டுமாம்!! மறந்துவிடவேண்டாம், பாஷ்யம், நமது மாநில அமைச்சராகவும் இருந்தவர். அவர், வழங்கும் யோசனை இது—பார்ப்பன குல மக்களுக்கு!

மற்றொருவர் தமிழைக் கலந்து குழைத்தெடுத்து எழுதுகிறார் என்று போற்றப்படுபவர்—அகத்திலும் புறத்திலும் புகுந்து புகுந்து விளையாடுகிறவர் — எழுத்தாளர் தம் சங்கத்திலும் இடம் பெற்றவர்—'கலைமகள்' எனும் ஏடு நடாத்துபவர்—தோழர் கி. வா. ஜகந்நாதன் பேசியிருக்கிறார், அந்த இளைஞர் சங்க ஆண்டு விழாவில். அவரும் இளைஞரல்ல! "பிராமணர்களாகிய ஒவ்வொருவரும் பக்தி வழியில் ஈடுபடவேண்டும். நமது முன்னோர்களின் வழியை நாம் பின்பற்றி நடக்கவேண்டும்" என்பதாக.

வேத சாஸ்திரங்களைப் படிக்க வேண்டுமென்றார், பாஷ்யம்! முன்னோர்களின் வழியைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்கிறார், ஜகன்னாதம்!

இவர்கள் மட்டுமல்ல, பார்ப்பன குலத்துக்கு உபதேசிகளாக மாறும் ஒவ்வொருவரும், சங்கராச்சாரியிலிருந்து சாதாரண மடிசஞ்சிவரையில், முன்னோர்களின் வழியைப் பின்பற்றி நட! பின்பற்றி நட! என்றே, சொல்லி வருகிறார்கள்.

முன்னோர்களின் வழியைப் பின்பற்றி நடக்கவேண்டுமாம்! அதற்கு வேத சாஸ்திரங்களைப் படித்துப் பக்குவம் அடையவேண்டுமாம்.

பார்ப்பன குல இளைஞர்களுக்கு அளிக்கப்படும் போதனை இது. முற்றும் கற்றுணர்ந்தவர்கள் எனப்படுவோர்—சமூக முழுமைக்கும் குரலெட்டக்கூடிய நிலையிலே இருப்போர்—இவ்வண்ணம் போதனை புரிகிறார்கள். அவர்கள் பங்கேற்ற விழாவிலே, பிராமணர்களுக்கென கல்யாண மகால் கட்டப்படவேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

* * *

> தர்மத்தை நிலைநாட்டவே பிராமணன் பிறக்கிறான். ஆகவே, உலகில் என்னென்ன இருக்கிறதோ அவை யாவும் அவனுக்கே சொந்தம். அவைகளைப் பூர்ணமாக அவன் அனுபவிக்கலாம். ஆகவே, உடுக்கவோ அல்லது உண்ணவோ பிறரிடம் அவன் யாசிக்கும் பொருள்கள் யாவும் அவனுக்காகக் கடவுள் உண்டாக்கியதே.

*

> பிராமணனுக்கு வரி விதிப்பதே கூடாது. அவர்கள், அரசாங்கத்தால் காப்பாற்றப்பட வேண்டியவர்கள்-

*

> ஒரு பிராமணன், நான்கு பேரைத் திருமணம் செய்துகொள்ளலாம். க்ஷத்திரியன், மூவரை மணக்கலாம். வைசியன், இருவரைத் திருமணம் செய்துகொள்ளலாம். ஆனால் சூத்திரனோ ஒன்றுக்குமேல் மணம் செய்துகொள்ள அருகதையற்றவன்.

*

> எங்காவது ஒரு புதையல் கிடைத்தால், எடுத்தவன் பிராமணனாக இருந்தால், அது முழுமையும் அவனே எடுத்துக்கொள்ளலாம். ஆனால் வேறு யாராவதோ அல்லது

அரசனேகூட அதை எடுத்தவனாக இருந்தால் அதில் பாதியைப் பார்ப்பனருக்குக் கொடுத்துவிட வேண்டும். மீதியைத்தான், பொக்கிஷத்துக்குக் கொண்டுபோக வேண்டும்.

*

வேதம், பிராமணனிடமிருந்தே பிறந்தது! ஆகவே, அவன் கடவுளுக்கும் மேலானவன் அவன் வாக்கே, சட்டம்''

*

மூடாத்மாவாக இருந்தாலும் அறிவாளியாக இருந்தாலும் பிராமணன் கடவுளின் தூதனே ஆவான். மூவுலகும், அவனுக்குச் சொந்தம். எனவே, ஒவ்வொரு பிராமணனையும் போற்றுவது, கடவுளைப் போற்றுவது போல ஆகும்.

*　*　*

வேத சாஸ்திரங்களுக்கு வித்து என்று அவர்களால் கூறப்படும் மனு வகுத்துள்ள சாஸ்திரீயக் கோட்பாடுகள் இவை! பார்ப்பனனுக்கு, வாழ்க்கையில் எவ்வளவு உயர்ந்த இடத்தைத் தருவதற்காக வேதங்கள் உண்டாயின் என்பதுதான், இன்றைய பிரச்னை. அதனால்தான், 'மனு நீதி ஒழிக!' என்கிறார்கள், அறிவியக்கவாதிகள்.

சாஸ்திரங்கள் என்று சொல்லப்படுபவைகளைப் படித்து, சனாதன முறைகள் கையாளப்படவேண்டுமெனின் பொருள் என்ன? என்றென்றைக்கும் மனித சமூகத்துடன் ஒன்றாமல், தனிக் காட்டு ராஜாவாக நீங்களிருக்கவேண்டும்—ஆரிய சம்பிரதாயங்களை அனுபவளவும் இழக்கச் சம்மதியாதீர்—அக்கிரகாரம் இருக்கட்டும் — சந்தியாவந்தன சம்பிரதாயங்கள் இருக்கட்டும் —தனிக் கூட்டமாகவே எப்போதும் இருக்கவேண்டும் என்பதுதானே அதன் பொருள்.

சாத்யமா, சாத்யமில்லையா என்பது ஒருபுறமிருக்க—இதுபோன்ற போதனைகளில் இந்தப் பெரியவர்கள் ஈடுபடலாமா, ஏற்றதா என்பதனையே கவனிக்கவேண்டுகிறோம்.

நாலு பேரைக் கல்யாணம் செய்யவோ-எடுத்தபுதையலைக்கொண்டு செல்லவோ—வரி செலுத்த முடியாதென்று வம்பளக்கவோ—இன்று அவர்களால் இயலுமா! சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்த சங்கராச்சாரியே சொன்னாலும், சட்டம் கொண்டுபோய்ப் பூட்டத் தயங்காதே, காராக்கிரகத்துக்குள்.

காலம் மாறுகிறது! வெகு வேகமாக மாறிக்கொண்டே இருக்கிறது!—இருந்தும், இந்தப் பெரியவர்கள் இளைஞர்களுக்கு அரிய உபதேசம் செய்கிறார்களாம் —முன்னோர்களின் வழிபட நடவுங்கள், அதுவே பிராமணகுல தர்மம் என்பதாக.

முன்னோர்கள் மூட்டிய தீ, தானே இப்போது பார்ப்பன சமூகத்தைக் கப்பிக்கொண்டு கறைப்படுத்தி வருகிறது. அதே பாதையில் மேலும் நடக்க முயன்றால், என்ன கதி நேரும் அவர்களுக்கு!

முன்னோர்களால் மூண்ட வினைகளை, கங்கைக்கரையையும் சிந்துநதித்தீரத்தையும் இருப்பிடமாகக்கொண்டு இந்தியதுணைக் கண்ட முழுமைக்கும் தமது சிடகோடிகளை அனுப்பி, ஆர்ய மதத்தை வளர்த்த, முன்னோர்கள் தமக்கென அமைத்துக்கொண்ட, சாஸ்திரங்களை— சம்பிரதாயங்களை, கோட்பாடுகளைத் தானே, குறை கூறுகிறார்கள் அறிவியக்கத்தவர்கள்.

இங்கிலையில், அந்த முன்னோர்களின்படி நடக்க வேண்டுமென்று கூற வருவதற்கு, எவ்வளவு நெஞ்சழுத்தமும், நெருப்புள்ளமும் இருக்கவேண்டும்.

முன்னோர்கள் வழிப்படியாம் —இவ்வண்ணம் மொழியும் மூதறிஞர்கள், முன்னோர்கள் என்று யாரைச் சொல்லுகிறார்கள்? கந்தமூலாதிகளைத் தின்று காலம் கழித்த முனி சிரேஷ்டர்களையா, மோகத்துக்குப் பலியான விசுவாமித்திரனையா, விநோத சித்துக்களைச் செய்வதற்காக மதுவும் மாமிசமும் அருந்திக் கிடந்தவர்களையா, நந்தவமிசத்தை அழித்த சாணக்கியனா, யாக்ஞவல்யனா, பாணினியா, சாகுந்தலம் எழுதிய காளிதாசனா, வால்மீகியா, இவர்களில் யாரை முன்னோர்கள் என்று சொல்லுகிறார்கள்? வரையறுத்துக் கூற முடியுமா, இந்தப் பெரியவர்களால்!

வேதம், உபநிஷதம், புராணம், கலைக்கியானம், இவைகளின்படி நடக்கவேண்டும் — இவைகளே பழைய சாஸ்திரங்கள் என்று சொல்லுவார்களானால், இந்தளவுக்கு வண்டி வண்டியாகச் சாஸ்திரங்கள் இருந்தும், அவர்கள் போற்றிப்புகழுகிற 'முன்னோர்கள்' ஆயிரக்கணக்கில் இருந்தும், இந்தப் பாரத பூமியில்' பிராமணீயத்தை எதிர்த்து புத்தமதம் ஏன் உண்டாயிற்று? சமணம் தழைத்த தெவ்விதம்? குருநானக் ஏன் உண்டாகலானார்? அந்தப் பிரிவுகளால் சிதையும் இந்து மதத்துக்கு புத்துயிரளிக்க சங்கராச்சாரியார் ஏன் தேவைப்பட்டார்? ராமானுஜர், புறப்படவேண்டிய அவசியம் என்ன? மாத்துவர், கிளம்பவேண்டிய நெருக்கடி எது? ஏன், துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், எனும் பிரிவுகளும்—அவைகளைப்பற்றிய வாதங்களும்—அதற்காகச் சிடகோடிகளும்—மடாலயங்களும் உண்டாகலாயின?

இத்தனையும் 'முன்னோர்களும்' அவர்கள் மூட்டை மூட்டையாக வழங்கிய 'சாஸ்திரங்களும்' இருந்தபோதுதானே ஏற்பட்டது?

அப்படி இருக்கும்போது, இந்தப் போதனையால், பார்ப்பனகுல இளைஞர்களுக்கு ஏற்படப்போகும் நன்மை என்ன? உலகம், வாவாவென்று கைதட்டி அழைக்கிறது! இந்த உபதேசங்களை அள்ளி வழங்கும் பாஷ்யம் அய்யங்காரும், கி. வா. ஜகன்னாதனும், விஞ்ஞானம் வழங்கும் வசதிகளையும், புதுயுகத்தின் பொலிவான சிங்காரங்களையும் அடைந்து மகிழாமலில்லை. ஆயினும், இளைஞர்களுக்குப் போதனை புரிய வருகிறார்கள்! என்றும் பேதமும் பிளவும் நீடிக்க பாதை அமைக்கிறார்கள்! இதனால்தான், தி. மு. க. முன்னாள் பொதுச்செயலாளர் எச் சரித்தார், "பார்ப்பனகுல இளைஞர்களுக்கு விரோதிகள், மாற்றார்களல்ல, அவர்கள் சமூகத்திலிருக்கும் பெரியவர்களே" என்று.

பெரியவர்களுக்கு, வளரும் புதுமையினின்றும், தமது இளைஞர்களைத் தடுக்கும் ஆசை அதிகமாகிறது! அதனால் இதுபோல ஆலோசனைகள் கூறக் கிளம்புகிறார்கள்.

இந்தப் போக்கு, அவர்களுக்குத்தான் ஆபத்து.

இதனை, பார்ப்பன குல வாலிபர்கள் நன்றாக உணரவேண்டும்,

உலகம் அழைக்கிறது, புதுயுகம் காண அனுதினமும் தன் மடியில் வந்து விழுந்துகொண்டிருக்கும்

புதுமைகளை, இருகையேந்தி அளித்தவண்ணம், அனைவரையும் அழைக்கிறது.

ஒன்றே குலம்! — எனும் கோட்பாடு உயரியது; சாதி, இனம், வேறுபாடு கற்பிப்பது வேண்டாத வன்செயல்; யாவரும் மனிதர்களே; மனித நீதியை உணர்ந்த ஒவ்வொருவனும் அண்ணன் தம்பிகளே! எனும் உன்னதமான சமுதாயத்தைக் காண வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது வாலிப உலகம்.

அந்த உலகத்துக்கும்—பார்ப்பன குல இளைஞர்களுக்குமிடையே மாபெரும் இடைவெளியைச் சிருஷ்டிக்க முயலுகிறார்கள், பத்தாம் பசலிப் பெரியவர்கள்! அதற்கு அவர்கள் தேடிப் பிடிக்கும் முழக்கமே "முன்னோர்கள் வழிப்படி நட; சாஸ்திர சம்பிரதாயங்களை அனுசரித்து ஆணும் பெண்ணும் நடகக வேண்டும்" என்பவைகளாகும்.

அவர்கள், வாழ்ந்துவிட்டவர்கள். வாழப்போகும் உலகமாகிய நாம் தான், நமது வருங்காலம்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

"பிராமணனுக்கு மட்டும் கல்யாண மகால்" என்கிற போக்கு, பயனற்றது; அந்தப் பாதையும் அபாயமானது, என்று அன்போடு, தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

1950 குடியரசு முகிழ்த்த நாளன்று டில்லியில் மந்திரியாராக இருந்த (இப்போது கவர்னர்) R. R. திவாகர் சொன்னார்,

**"ஏதாவது ஒரு மாறுதலைச் செய்ய உத்தேசித்தால் அல்லது அந்த மாறுதல் தங்களுக்கு பிடிக்கவில்லை என்றால், அல்லது சில சுயநலமிகளுக்கு அந்த மாறுதலால் இடையூறு ஏற்படுமானால் உடனே சில நபர்களும் சங்கங்களும் சேர்ந்து 'ஹிந்து கலாச்சாரத்துக்கு ஆபத்து!' என்று கூச்சல் எழுப்புவது வழக்கம். பய உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு வைதீக சக்திகளை ஒன்று படுத்தும் வழி அது…"**

**"ஜாதிமுறை ஆட்டங் கண்டுவிட்டது அது இறப்பது உறுதி."**

* * *

உண்மைகளைச் சுயமரியாதைக்காரன் சொல்லுகிறான் என்பதால், உதறித் தள்ளிவிட வேண்டாம்! காலம் உங்களை உதறித் தள்ளிவிட்டு பறந்துகொண்டேயிருக்கும்!!

✶

# சோழ நாட்டின் சோர்வு

[ பி. எஸ். பி. ரங்கன் ]

சோழ வள நாடு, வளம் கொழிக்கும் அந்த நாடு, இன்று சோர்வடைந்துவிட்டது. சிங்காரப்பூங்கா இன்று சிதைந்து கிடக்கிறது. பாய் விரித்தாற்போன்ற பசுமை இன்று பளிங்குபோன்ற தண்ணீரிலே மூழ்கிக் கிடக்கிறது. பூத்துக் குலுங்கும் சோலைகளைக் கண்டு பூரித்தோம். காய்த்துக் கொட்டும் சோலைகளைக் கண்டு களித்தோம். பழம் உதிரும் சோலைகளைக் கண்டு பரவசமடைந்தோம். ஆனால், இன்று அங்கே பரிதாப நிலை. புயல் வீசிற்று. இருமுறை! சூறுவளியில் சிக்கிக்கொண்டது.

பயங்கரப் புயல், விடாத மழை, பெருவெள்ளம் மூன்றும் சேர்ந்து மும்முனைப் போராட்டம் நடத்தின. இயற்கைக்குத் தலைகுனிய வேண்டியதாயிற்று. குமரிமுனை, கோடிக்கரை, தோப்புத்துறைவரை நான் பட்ட பாடும், வேதாரண்யம் அடைந்த வேதனையும் துலாக்கோலில் நிறுத்திய ஒரே அளவு கொண்டவை.

என் இருப்பிடத்திலிருந்து நான் வெகுதூரம் வந்திருந்தேன். அது ஒரு பெரிய கிராமம். கடைவீதிகள் உண்டு. மற்ற வசதிகளும் இருக்கின்றன. ஆனால், வெளியூர்த் தொடர்புக்குப் பஸ்ஸைப் பிடிக்க நான்கு மைல்கள் போகவேண்டும். நான் சிலமுறை அவ்வூர் சென்றிருக்கிறேன். அங்கு திராவிட கிளைக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கிளைக் கழகம் அமைக்கப்படாதது எனக்குப் பெரிய குறையாக இருந்தது. இதற்குமுன் போயிருந்த சமயங்களில் சில வாலிபர்களைக் கலந்தாலோசித்துத் திராவிட முன்னேற்றக் கிளைக் கழகம் அமைக்க ஏற்பாடு செய்துவந்தேன். இந்த முறை போயிருந்தபோது கழகம் அமைக்க ஏற்பாடாயிற்று. மழையோ விடவில்லை. எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினேன். மழை சிறிது குறைந்தது. வண்டி போகமுடியாத காரணத்தால் ஒரு தோழர் என்னை அவர் சைக்கிளின்பின் உட்காரச் சொல்லி, கொண்டுவந்து பஸ் நிற்குமிடம் சேர்ப்பித்துத் திரும்பினார்.

என் உயிரோவியம் பச்சிளங் குழந்தையையும் என மனைவியையும் பார்க்க விரைந்தோடினேன். எனக்கும் அவர்களுக்கும் இடையில் இருக்கும் தூரமோ சுமார் அறுபது மைல்கள் இருக்கும்.

பெருமழை பெய்துகொண்டிருந்தது. அதற்குமுன் நான்கு நாட்களாகவே விடாத மழை அது. அதனூடே என் பிரயாண காலமும் நடந்துகொண்டிருந்தது.

அப்பொழுதே எங்கு பார்த்தாலும் தண்ணீர் தேங்கிவிட்டது. பள்ளத்தாக்கான சில இடங்களில் தண்ணீர்ஓட்டமும் கண்டது. அது சமயம் காலை சுமார் பத்து மணி இருக்கலாம்.

மேலும் என் பிரயாணம் தொடங்கிற்று. அடைமழை விடவில்லை. பாதிதூரம் வந்துவிட்டேன். பஸ் மெதுவாக ஊர்ந்தது. விடாத மழையினால் ஆங்காங்கே தண்ணீர் பெருகி ரோடு வழியே வழிந்து கொண்டிருந்தது.

ஒரு வழியாக சில மணி நேர தாமதத்துடன் பஸ் நிற்குமிடம் வந்து சேர்ந்துவிட்டேன்.

நான் போகுமிடம் இன்னும் இருபத்தேழு மைல்கள்தான் பாக்கி. நான்கு மைல்கள் நடந்தால் இரயில்வே ஸ்டேஷனை அடையலாம் என் எண்ணமும் அதுதான். இரயிலைப் பிடிக்க ஸ்டேஷனை நோக்கி விரைந்தேன்.

கால்நடைதான். வேறு வழியில்லை. வண்டிப் பாதை. ஆனால் அந்த மழையில் எந்த வண்டியையும் காணோம். துணைக்கு ஆட்களுமில்லை. தனிவழி வந்துகொண்டிருந்தேன் — சோவென்றடிக்கும் மழையில் நனைந்துதான்.

கையில், நனைந்த மாற்றுடையுள்ள பை இருக்கிறது. பையின் உள்ளே இருக்கும் கைக்கடிகாரத்தை எடுத்துப் பார்த்தேன். அதுவும் நனைந்து நின்றுவிட்டிருந்

தது. மேலே நடந்தேன். இரண்டு பர்லாங் போயிருக்கலாம். ஓர்பெரும் இரைச்சல் — பட படவென்ற சப்தத்துடன். பயந்துபோனேன். பயம் என்னை உந்தித் தள்ளிற்று. ஓடினேன், அடுத்த விநாடி என் முகத்தில் யாரோ அறைந்தது போன்ற பிரேமை. மூச்சுவிடமுடியவில்லை. என் நெஞ்சு வலித்தது. கீழே உட்கார்ந்தேன். மூன்று முறை பந்துபோல் தூக்கி எறியப் பட்டேன்.

பலத்த புயல் காற்று அடிக்கிறது. பெருமழை பெய்கிறது. அப்போது என் கண்ணிற்கு கரும்பு ஆலையின் அடுப்பும் அங்கு நான் வந்திருப்பதும் தெரிந்தது

சற்று நேரம் கழித்து, அடுப்பின் வாய் வழியாக வெளியே எட்டிப் பார்த்தேன். என் கண்களுக்கு உலகமே சுற்றுவதுபோல் ஓர் தோற்றம். ஒடிந்த மரக்கிளைகளும், தென்னை மட்டைகளும், பனை ஓலைகளும், ஆகாயத்தில் பறந்தன. கள்ளிக்கோட்டை ஓடுகள் எங்கிருந்து வருகின்றனவோ தெரியவில்லை, சரமாரியாக, சிட்டுக் குருவிகள் கூட்டம் கூட்டமாக பறந்து செல்வதுபோல் இருந்தன அந்தக் காட்சி. கூரை வேய்ந்த தகரங்கள் பிய்த்துக்கொண்டு பல இடங்களில் சிதறிப் பறந்தன.

ஏதோ ஒரு பக்கத்தில் தென்னை மரம் ஒன்று முறிந்து சுமார் பன்னிரண்டடி உள்ள அதன் நுனி மரம் சுமார் பதினைந்து குலைகளைத் தாங்கிக்கொண்டு, குலைக்கு இருபதுக்கு மேற்பட்ட தேங்காய்களுடனும், ஐம்பதுக்கு மேற்பட்ட மட்டைகளுடனும் விண் மீன் விழுவது போன்று பாய்ந்து வெகு தூரம் போகிற தென்றால் புயலின் கொடுமை எத்தன்மை வாய்ந்தது என் அறியலாம்.

இரவு முழுவதும் அடுப்பினுள் காலம் கழித்தேன். நடுநிசி; சுமார் ஒருமணி இருக்கும். காற்றின் வேகம் உச்சநிலையை அடைந்தது. மழை விடவில்லை. ஒருவாறு இரவு கழிந்தது. பொழுதும் புலர்ந்தது.

காலை சுமார் ஆறுமணி இருக்கும் புயல் காற்று ஓய்ந்தது, கம்மிய இருட்டுக் கப்பிக்கொண்டிருந்தது.

சுற்றிலும் நீர்த்தேக்கம். இரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வழியே தெரியவில்லை. மனதைத் திடப்படுத்திக்கொண்டு நடக்கலானேன். முழங்கால், பெருதொடை, இடுப்பு வரை தண்ணீர் ஏறிற்று. பொருட்படுத்தாமல் மேலும் நடந்தேன்.

இப்படியாக வெகுதூரம் வந்துவிட்டிருக்கிறேன். கடல் தண்ணீர் உள்ளே புக, மழைத் தண்ணீர் பெருக, ஆற்றுவெள்ளம் சேர எங்கு பார்த்தாலும் வெள்ளக் காடாகிவிட்டது.

ஒரு திடலில் ஏறினேன். அந்த வட்டாரத்தில் அந்த ஒரு திட்டுத்தான் வெள்ளத்தில் மூழ்காமல் பாய்மரம் மிதப்பதுபோல் இருந்தது.

வெள்ளம் பெருகிற்றேயொழிய குறைவதாகயில்லை. பக்கத்தில் ஒரு நதிதான் ஓடியிருக்கவேண்டும், அது போகும் திசையில் தண்ணீர் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் ஒரு வைக்கோல் போர் மிதந்து அந்த வழியே சென்றது, அதன்மேல் கோழிகளும் நாயும் இருந்தன. என் உடல் நடுங்கிற்று.

நேரமே தெரியவில்லை. ஆற்றில் மிதந்து செல்லும் பொருள்களைத் தான் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தேன். மரக்கிளைகள், தென்னை மட்டைகள், தேங்காய்கள் குதிரை, குதிரைக் குட்டிகள், மான்கள் எல்லாம் இறந்து மிதந்து சென்றன. எருமை ஒன்று போயிற்று. ஆனால் அது உயிர் இழக்கவில்லைபோல் தெரிந்தது.

இரு மனித உருவங்கள் பிணமாக மிதந்து சென்றன. இப்பொழுதுதான் என் வாழ்க்கையிலே ஒரு பெரும் அதிர்ச்சியைப் பெற்றேன். என்னை அறியாமல் அம்மா என்று அலறியிருக்கிறேன்.

என் ஆயுட் காலம் முடிந்துவிட்டதென நினைத்தேன். அது சமயம் வெகு தூரத்தில் ஒரு ஆள் தண்ணீரில் நீந்தியும், மூழ்கியும், நடந்தும் வருவதைக் கண்டேன். அவர் சொன்னார்,

கடல் தண்ணீர் உள்ளே புகுந்ததால் அவர் ஊரே நாசமாம். எல்லோரும் மடிந்தனராம். அவரும் அவர் தங்கை ஏழு வயதுப் பெண்ணும் தப்பி வந்திருக்கிறார்கள். வெள்ளம் அவர்களை விடவில்லை, தங்கையைத் தூக்கிக்கொண்டு வெகு தூரம் தண்ணீரில் நடந்தும், நீந்தியும் வந்திருக்கிறார். மேலும் அவரால் சமாளிக்க முடியாத காரணத்தால் தன் உயிரையாவது காப்பாற்றிக்கொள்ள நினைத்து தன் அன்புத் தங்கையை உயிருடன் வெள்ளத்தில் விட்டுவிட்டதாக், கதறி, கண்ணீர்விட்டு தன் கதையைச் சொல்லி முடித்தார்.

பிறகு இருவரும் அவ்விடம் விட்டுச் சிறிது தூரம் சென்றோம், நல்லவேளையாக இரயில் பாதை காலில் தென்பட்டது. அதன் வழியே வெகுதூரம் சென்றோம். உருக்குலைந்துபோன ஒரு இரயில்வே ஸ்டேஷன் வழியில் இருந்தது. எந்தப் போக்குவரத்துமில்லை. மேலும் நடந்து அடுத்த இரயில்வே ஸ்டேஷனை அடைந்தோம். அந்த ஸ்டேஷன் காற்றில் அழிந்துவிட்டதென்றாலும், வெள்ளம் அவ்வளவாக இல்லை. இருவரும் அங்கே தங்கிச் சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டோம். ஆனால், அதை அடுத்த ஸ்டேஷனில்தான் இரயில் வசதி ஏற்படும் என்று அங்கு வந்திருந்த அதிகாரிகள் சொன்னார்கள். மேலும் நடந்தோம். அங்குமிங்கும் முழங்கால் அளவு தண்ணீர் ஓடிற்று. ஆனால், அவதிக்காளான ஆட்கள் முன்னும் பின்னும் வந்துகொண்டிருந்தார்கள்.

அடுத்த ஸ்டேஷனை அடைந்தோம். வெகுநேரத்திற்குப் பிறகு ஒரு இரயில் வண்டிவந்தது. அதில் ஏறி உட்கார்ந்து எங்கள் ஊர் பிரயாணம் தொடங்கினோம். கூடயிருந்த நண்பர், ஈரோட்டுப் பக்கம் உள்ள தன் உறவினர் வீட்டுக்குப் போவதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டார். நானும் ஒருவழியாக வீடு போய்ச் சேர்ந்தேன்.

என்னை அனுப்பிவைத்த அருமைத் தோழர்கள் என்ன ஆனார்களோ தெரியவில்லை. அந்தத் தோழர்கள், என் நிலைமை என்ன ஆயிற்றோ என்று வருத்தப்படலாம். நான் பத்திரமாக இருக்கிறேன்.

ஆனால், என்னைவிட அவதிப்பட்டவர்கள், அல்லலுற்றவர்கள் எத்தனை எத்தனையோபேர் அந்தப் பகுதியில். அவர்களுக்கு உதவி செய்ய எல்லோரும் முன் வாருங்கள்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

நிற்கிறோம். கண்ணீரைப் பொழிகிறோம், கருணை நிதி நிறைந்தோரே! எமக்கு வந்துற்ற கொடுமையைக் கண்ணால் பாரும், உதவி புரிந்திட முன்வாரும்! என்று இறைஞ்சிநிற்கிறோம், விளைந்துள்ள பெரு நஷ்டத்தைக் கண்டு, நிலைமையை மீண்டும் சீராக்க பல கோடி தேவைப்படுமே, என்ன செய்வது, பேழையோ கல்லார் மனம்போலக் காலியாகக்கிடக்கிறது என்றெண்ணி அமைச்சர்கள் திகைக்கிறார்கள். ஏன் இந்த நிலைமை? வடக்குக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதால் அல்லவா? தெற்கு தேய்ந்து போனதால் அல்லவா?

வடக்கு ஆதிக்கம் செலுத்தாமல் இங்குள்ள செல்வத்தைச் சுரண்டாமல், தொழிலைப் பாழ்படுத்தாமல், தெற்கு வளர வழி செய்திருந்தால், நாம் ஏன் இன்று பிச்சைப் பாத்திரத்தை ஏந்தும் இழிநிலையில் இருக்கப்போகிறோம்? இங்குள்ள மக்களின் உழைப்பு உடலும் உயிரும் ஒன்றியிருக்க மட்டுமே பயன்படுகிறது— துரைத்தனத்துக்கு உள்ள அதிகாரமோ, மக்கள் பசியால், போதாமையால், இல்லாமையால், இப்படி ஏதேனும் ஓர் வகையில் சாவதற்கு முன்பு 'தற்கொலை' செய்துகொள்ளாமல் தடுத்து நிறுத்திவைக்க மட்டுமே பயன்படும் வகையில் அமைந்திருக்கிறது எனவேதான், கையேந்தி நிற்கிறோம். இந்தக் கேவலம் தெரியத்தானே செய்கிறது! தமிழகத்துக்கு வந்துற்ற விபத்து உண்டாக்கிய வடுக்களைப் போக்கும் அக்கரையிருந்தும், இங்குள்ள சர்க்காருக்கு ஆற்றல் இல்லையே! வாஞ்சனை இருக்கிறது, வசதி இல்லை! கருணை பிறக்கிறது, காசு இல்லை! பேரன்பு கொண்டோரிடம் பேழையில்பணம் இல்லை! ஏன்? எல்லாம் டில்லியில் ஒப்படைக்கப் பட்டிருப்பதால் தானே?

பசியால் துடிக்கும் குழந்தை' பால்வேண்டி, தாயின் மார்பினைச் சுவைத்து பால் காணாது கதற, சேய் அழக்கண்டு தாய் அழுவது போல, குடில் இழந்து குடும்ப மணிகள் இழந்து கதறும் மக்கள், காமராஜரைக் கண்டு கை ஏந்தி நிற்கிறார்கள்—அவர் கண்களைத் துடைத்துக்கொண்டு, நேருவிடம் கை ஏந்தி நிற்கிறார்! இதுதானே நிலைமை? இது,' வேதனைக்கிடையிலும், 'நமது இழி நிலைமையைத் தானே காட்டுகிறது. வடக்குக்கு உள்ள ஆதிக்கம் விளக்கமாகிறதே! யார் அறிந்துகொள்ள மாட்டார்கள் இதனை. எனினும் இந்த நேரத்திலும், நம்மைக் குத்துவதிலே, அமைச்சர் சுப்ரமணியனாருக்கு ஒரு அலாதி மகிழ்ச்சி! திருவல்லிக்கேணியும் திருமயிலையும், 'நம்ம சுப்ரமணியம்' என்று அணைத்துக்கொள்ள வேண்டுமே ஆச்சாரியார் என் குருநாதர் என்று கூறிப் பூஜித்தால் மட்டும் போதுமா, 'அதுகளை'யும் சாடினேன் என்று காட்டினால்தானே, 'என்னதான் சொல்லுங்கோ! நம்ம சுப்ரமணியத்துக்கு உள்ள புத்தி தீட்சணியம், இந்தக் காமராஜுக்கு கிடையாது' என்ற அக்காரவடிசல் கிடைக்கும். அதற்காக அவர் அர்த்தமற்றதைப் பேசுகிறார்.

வடக்கு—தெற்கு, என்ற பிரச்சினை, வெள்ளம், விபத்து, அவதி, அல்லல், இவைகளுக்காகத் தரப்படும் உதவி, இவற்றுடன் நின்றுபோவதல்ல. அரசியல் என்பது அன்னதான சமாஜமுமல்ல, உரிமைக் கிளர்ச்சி என்பது உண்டிப்பெட்டி நிரம்பிவிட்டால் கருகிப்போவதுமல்ல. காட்கில் எனும் மாவீரர் முழக்கமிடுவதுபோல தன் மானத்தை இழந்துவிட எந்த ஆண்மகனும் சம்மதியான், கற்பை இழந்திட எந்தக் காரிகையும் சம்மதிக்க முடியாது, அதுபோன்றே உரிமையை இழந்திட எந்த நாடும் ஒருப்படாது.

சப்ரமஞ்ச கூடம், சல்லாத்துணி, ஜரிகை வேலைப்பாடு, சந்தனம் பன்னீர்—என்று காட்டி, கற்பைச் சூறையாடுபவன் பேசுவதாகக் கதைகளில் படிக்கிறோம், கனம். சுப்ரமணியமோ, சவக்குழி தோண்ட மண்வெட்டி உதவினானே மகானுபாவன், அவன் பாதம் போற்றுதும் என்று பேசிடும் பேதமை போல, ஆதிக்கம் செலுத்தும் வடக்கு, நம்முடைய செல்வத்தைச் சுரண்டிவைத்துக் கொண்டு, கொடுமையில் சிக்கித் தவித்திடும் வேளையில் கொஞ்சம் தாராளம் காட்டுகிறதே, அதுவே போதும் என்கிறார்; அதனால் நாம் வாயடைத்துப் போவோம் என்று வேறு எண்ணுகிறார்—சொல்லவும் துணிவு கொள்கிறார்.

தனக்கென்று ஓர் இலட்சியம் கொண்டோர் எவரும், அதற்கான பணியாற்றுகையிலே, குறுக்குப் பாதைகள் கண்டால் அதிலே நுழைந்து, இலட்சியத்தை இழந்துவிடச் சம்மதிக்கமாட்டார்கள். இலட்சியத்தை நோக்கிச் செல்வோருக்கு, அதற்கான ஆக்கமும் ஊக்கமும் அளிப்போரே தலைவர்கள், நண்பர்கள், வழிகாட்டிகள், ஞானாசிரியர்கள். இடையில் இளநீர் கொடுப்போர் நன்றிக்கு உரியோர், இதயம் நோகப் பேசுவோர் பரிதாபத்துக் குரியோர், உடனிருந்து கெடுப்போர் கண்டனத்துக்கு உரியோர், பாதையில், பயணத்தின் கடுமை தாங்கமாட்டாமல் பட்டுப்போவோர், அனுதாபத்துக்குரியோர். அமைச்சர் சுப்ரமணியனாருக்கு சில பல அலுவல்கள் உள்ளன—தரப்பட்டுள்ளன! அவ்வளவே தவிர, அவர் ஓர் இலட்சியத்துக்காகப் பணியாற்றும் பொறுப்பில் ஈடுபட்டவரல்ல. எனவேதான் அவர் குருபக்தியைக் கொட்டுவதிலும், நம்மைக் குத்துவதிலும் குதூகலம் காண்கிறார். காணட்டும்! களிப்பூட்டப் படட்டும், நமக்கேதும் நட்டமில்லை. தமக்கென்று ஓர் குறிக்கோள், அது குறையுடையதோ நிறைமிகுந்ததோ, நாடு கொண்டாடுவதோ அல்லவோ; தன் நெஞ்சார நம்பும் ஓர் குறிக்கோளுக்காகப் பணியாற்றும் எந்தத் தலைவரும், அதற்குக் குந்தகம் விளைவிப்போர் எவ்வளவு பெரியவராயினும், பெருநிலையைப் பிடித்துக்கொண்டவராக இருப்பினும், குருபீடத்தில் அமர்ந்திருப்பவராகவே இருப்பினும்கூட, அவரைவிட்டு விலகவும், வேறு பாதை தேடவும், அவர் மூலம் இழிவும் பழியும் கிடைப்பதாயினும் ஏற்றுக்கொள்ளவும், தாங்கிக்கொள்ளவும், இடுப்பொடிந்ததுகளும், ஆசை அலைமோதுவதால் அங்கலாய்ப்போரும் அடிவருடிகளாகி ஏசலை வீசினும் பொருட்படுத்தாமல், எடுத்த காரியத்தை முடித்திடும் நோக்குடன் பணியாற்றுவர்.

நேரு பண்டிதருடன் அமைச்சர் சுப்ரமணியனாருக்கு உள்ள தொடர்பு, நாடு அறிந்ததுதான். நேரு பண்டிதரின் பத்துப் பதினாறு தர்பார்களிலே உள்ள தலையாட்டும் துரைமகனார்களிலே இவர் ஒருவர் என்ற அளவிலே உள்ள தொடர்புதான்!

மராட்டிய மண்டலத்து காட்கில் அப்படி அல்ல.

நேரு பண்டிதருடைய எழுச்சிமிக்க வரலாற்றிலே, காட்கில் ஒரு சிறப்பான இடம் பெற்றவர்; உடனிருந்து பணியாற்றியவர்; விடு

தலைக் கிளர்ச்சியில் முன்னணி நின்றவர்.

அவருக்கு அமைச்சர் அலுவல் இல்லை; எனவே ஆசாபாசத்துக்கு ஆட்படவேண்டிய கேவலம் ஏற்படவில்லை; அவருக்கு ஓர் குறிக்கோள் இருக்கிறது; எனவே அவர் பூஜித்துக் கிடக்க மறுக்கிறார், இலட்சிய முழக்கமிடுகிறார்- குரு பக்தி—கட்சிப் பாசம் — பதவியில் பற்று — அதிகாரத்தைக் கண்டு அச்சம்—இவைகள் தலைகாட்ட மறுக்கின்றன. டில்லி ஆட்சி மன்றத்தில் அஞ்சாநெஞ்சுடன் பேசுகிறார். நேசம் மறக்கவில்லை, பாசம் பட்டுப் போகவில்லை, எனினும், இவைகளுக்காகக் குறிக்கோளை இழக்கமுடியாது என்று முழக்கமிடுகிறார்.

அவ்வளவு பெரியவர் தொட்டிழுத்தபோது, நான் என்ன செய்ய முடியும்? என்று வாதாடுபவளைப் பத்தினியாகவாகொள்ளமுடியும்!

நாளைக்கு அவர் எவ்வளவு பெரியவராவாரோ, யார் கண்டார்கள்? இன்றே எனக்கு அவர் நேசம் கிடைத்துவிட்டது என்றெண்ணிப் பூரித்திடுவாள், கண்டாரைக் கொல்லும் காரிகை.

காட்கில், எவ்வளவு பெரியவரானாலும் என்ன, உரிமை எல்லாவற்றினும் பெரிது என்கிறார். அமைச்சர் சுப்பிரமணியம் இப்படிப்பட்டவர்கள் வாயடைத்துப் போகவேண்டும் என்று தவமிருக்கிறார்.

காட்கில் கேட்கிறார், தன்மானம், கற்பு, உரிமை இவை தமை இழக்க எப்படி முடியும் என்று.

**வெள்ளத்துக்கு உதவி செய்கிறது வடக்கு, எனவே அதற்கு வெள்ளாட்டியாக இருப்பதிலே வெறுப்படைவதோ, வெண்சாமரம் வீசுவதைக் கண்டிப்பதோ கூடாது அப்படி எல்லாம் பேசுபவர்களின் வாய் இனி அடைத்துப் போகும் என்கிறார், சுப்ரமணியனார்.**

தேசிய உணர்ச்சி இல்லையா, மராட்டியருக்கு மராட்டிய மண்டலம் என்று பேசுகிறீரே, என்று இங்கு நம்மை சுப்பிரமணியர்கள் கேட்பதுபோல, காட்கிலைக் கேட்கிறார்கள். சந்தனமே! மணமாக இரு! என்று சொல்வாருண்டா? மராட்டியர்களைப்பார்த்து, தேசியஉணர்ச்சி கொள்ளுங்கள் என்று கூறுகிறீர்களே, என்று காட்கில் கேலியால் அவர்களைக் கொல்கிறார்.

வெட்டும் குத்தும், கலகமும் குழப்பமும், இரத்தக்களரியும்கூட நடத்தமுடியும் — இவை போன்ற முறைகளிலெல்லாம் ஈடுபடவேண்டிய அளவுதான், நிலைமை மோசமாகிக்கொண்டு வருகிறது, என்று எச்சரிக்கையே செய்கிறார், காட்கில்.

"இராஜ்யப்புனரமைப்புக்கமிஷன் மராட்டியர்களைக் குறித்துக் கூறியுள்ள கருத்து, மராட்டிய இனத்தை இழிவுபடுத்துவதாக இருக்கிறது. கடந்த 600 ஆண்டுக் காலத்தில் இப்படிப்பட்ட இழிமொழியை மராட்டியர் மீது யாரும் வீசியதில்லை. இந்த இழிவைத் துடைத்திட, பதிலளித்திட எமக்குத் தெரியும்—ஆனால் அந்த முறைகள் இன்று சரியானவை என்று ஏற்றுக்கொள்ளப்படாதனவாக உள்ளன—குடி அரசுக்கோட்பாட்டுக்கு முரணானவைகளாகவும் உள்ளன," என்று மனம் குமுறிப் பேசுகிறார் காட்கில்.

பதிலளிக்கத் தெரியும்-பதிலளிக்கும் முறைகள் உள்ளன, என்று காட்கில் கூறினாரே, தம்பி! அதிலே தான், கொலை கொள்ளை, குத்து வெட்டு, இரத்தக்களரி யாவும் அடங்கியுள்ளன.

மராட்டியரை மட்ட நிலையில் வைத்திடவும், அவர்களின் உரிமைக்கு உலை வைக்கவும், இன்று டில்லியில் ஓர் அரசு முயற்சிக்கும்போது, அதே இடத்திலிருந்து பாதுஷாக்கள் முயன்ற காலமும், அந்த ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமும், மாவீரன் சிவாஜியின் பரம்பரையில் வந்த காட்கில் அறிவாரல்லவா? அமைச்சர் சுப்ரமணியம் அவ்விதமல்லவே, அவர் இராமனுக்குத் தாசனான அனுமனின் பிரபாவம் பற்றிய பெருங்காதையை பயபக்தியுடன் கேட்டு இரசிப்பவர்தானே! எனவேதான், குரு பக்தியையும், குருவின் மனம் மகிழும் என்ற எண்ணத்தில் நம்மைத் தாக்கிப் பேசுவதையும் செய்து காட்டியிருக்கிறார்.

குறிக்கோள் கெடுகிறது என்று தெரிந்தால், சிலருக்குக் குருபக்தி கூட மெள்ள மெள்ளக் குறைந்து விடத் தொடங்குகிறது என்பதை விளக்கும் வகையில், நண்பர் ம. பொ. சிவஞானம் அவர்கள் இப்போது எழுதுகிறார்.

அவருடைய குறிக்கோள் 'மொழி வழி அரசு' என்கிறார்.

இதுதான் சாலச்சிறந்தது மற்ற குறிக்கோள்கள் யாவும் போலி என்கிறார்.

மற்றக் குறிக்கோள்கள் யாவும் போலி என்று தன்னைத்தான் நம்ப வைத்துக்கொண்டால்தான், தான் மேற்கொண்டுள்ள குறிக்கோளிடம் தமக்கே ஒரு அச்சம் கலந்த ஆர்வம் பிறக்கும் என்று எண்ணுகிறார்போலும். எப்படியோ இருக்கட்டும்—அவர், மொழிவழி அரசு கிடைத்திடப் பணியாற்றுவதை தமது கழகத்தின் தலையாய கொள்கையாகக் கொண்டிருக்கிறார் அதேபோது அவருக்கு நேரு பண்டிதரிடம் 'பக்தி' உண்டு; காங்கிரஸ் கட்சியிடம் 'பாசம்' நிரம்ப.

நேரு பண்டிதரைக் கண்டித்தால் —யாராவது—ம. பொ. சி.க்கு எரிச்சல் எழுகிறது. பண்டிதரைப் பதட்டமாகக் கண்டிக்கும் பதர்களை விட்டுவைக்கமாட்டேன் என்பார். தாய்—சேய்—உறவு, எனக்கும் காங்கிரசுக்கும் என்று அனாதைப்பிள்ளை ஆக்கப்பட்ட பிறகுங்கூட கூறுகிறார்.

நேரு பண்டிதரின் அமோகமான அறிவாற்றல்தான் என்னே! அவருக்கு உலக அரங்கிலே கிடைத்துள்ள பெரும்புகழ்தான் என்னே! என்னே! என்று வியந்து கூறுகிறார்.

தமிழர்களை மிக மிகத் தாழ்வாக நேரு பண்டிதர் கண்டித்தபோது தம்பி! சீறி எழுந்து, கிளர்ச்சி நடத்தி, கடும் தண்டனைகளை ஏற்றுக் கொண்டவர்கள் நாம் — அவரல்ல. அவர், நேரு பண்டிதரைக் கண்டிக்காதது மட்டுமல்ல, முட்டாள்கள்! சிறுபிள்ளைத் தனம்! என்று நேரு பண்டிதர் இவர்களை ஏசிப் பேசினார்; எங்களையன்றோ அதுபோல் பேசினார், அதற்காக இவர்கள் ஏன் கிளர்ச்சி செய்தனர்? அடாது! அடாது!! என்று பேசவே செய்தார். அவ்வளவு குருபக்தி அவருக்கு, ஆனால், இப்போது, நேரு பண்டிதரின் போக்கு, மொழி வழி அரசு கொள்கையைக் குழி தோண்டிப் புதைப்பதாகவும், மொழி வழி அரசுக் கொள்கையைப் போற்றுவோரைப் புல்லர்கள் என்று கண்டிக்கும் வகையினதாகவும் இருந்திடக் காண்கிறோம் — குருபக்தியின் வேகம் குறைகிறது!!

**தோற்றால், துடிப்பார்!**
**பொய் பேசுவார்!**
**ஆவேசமாடுவார்!**
**குப்புற விழுந்தார்!**

என்று ம. பொ. சி. இப்போது எழுதுகிறார்—நேருவைப்பற்றி.

'பிறர் தருந்த காரணத்துக்காக,' தடியடி சிறை என்று அஞ்சாமல்

பெருவை எதிர்த்து நியாயமான முறையில் கிளர்ச்சி நடத்திய போது, எங்கள் நேருவுக்கா கண்டனம்? எற்றுக்கு? பாரத நாட்டின் அந்தஸ்தைப் பாரெல்லாம் உயர்த்தி விட்டாரே, அதற்கா? பஞ்சமும் நோயும் பாரத நாட்டிலா என்று கேட்டுப் போரிட்டு அவைதமை விரட்டி அடித்தாரே அதற்கா? எதன் பொருட்டய்யா, எம்மானை, நேரு பெம்மானைக் கண்டிக்கிறீர்? என்று காய்ந்து கேட்டாரல்லவா, அதே ம. பொ. சிக்கு, மாழிவழி அரசு' என்பது வெறும் வரட்டுக் கூச்சல், வகை கெட்ட திட்டம், பொருளற்ற வாதம், புத்தி கெட்ட பேச்சு என்றெல்லாம் பொருள் படும்படி, நேரு பேசுகிறார் என்றதும், கோபம் கோபமாக வருகிறது, கொதிக்கிறார், குமுறுகிறார், கோல் எடுக்கிறார், நேருவைத் தாக்க! குருபக்தி குறைகிறது. குலைகிறது!!

தனக்கு வரும் போதுதான் தெரிகிறது, தலைவலியும் காய்ச்சலும்.

பொய்யர்
புரட்டர்
ஆவேசக்காரர்

என்றெல்லாம் ஒரு போதும் எமது ம. பொ. சி. கூறமாட்டார் என்று கூறும் சிலர் உளர், தம்பி! மிகச் சிலர். எனினும் அவர்களுக்கும் நாம் விளக்கமளிப்பதுதான் கண்ணியம்.

**தமது அந்தஸ்து தாக்கப்படும்போது, தம்முடைய கருத்திலே காலூன்றி, நிற்க முடியாதபோது, தோல்வி மனப்பான்மை கொண்டு மற்றவர்களுக்குச் சவால் விட்டுப் பேசுவது நேருஜீயின் சுபாவமாகி விட்டது.**

ம. பொ. சி. தமது ஏட்டில் தீட்டுகிறார் இதனை,

**சவால் விடுவது நேருவின் சுபாவம்.**

**தோல்வி மனப்பான்மை கொள்ளும் போது இவ்விதம் நேரு சவால் விடுவார்.**

**தமது அந்தஸ்து தாக்கப்படும்போது, இவ்விதம் சவால் விடுவார்.**

**தம்முடைய கருத்து நிலைக்காத போது சவால் விடுவார்.**

இவ்வளவு கண்டனங்களையும் மணிகளாக்கித் தமது சொற்சிலம்புக்குள் போடுகிறார் ம. பொ. சி. இம்மட்டோ! இதோ மேலும்,

**பெரிய பதவியிலிருக்கும் நேரு, உண்மைக்கு மாறாகப் பேசியிருக்கிறார்.**

**ராஜ்யங்களைத் திருத்தி அமைப்பதில் மொழிக்கு முக்யத்துவம் கொடுக்கத் தாம் தயாராக இல்லையென்றும் தலைவர் நேரு ஆவேசத்துடன் கூறியிருக்கிறார்.**

**மொழிவாரி இனங்களிடையே எழுந்த உரிமைக் கிளர்ச்சி, அவருடைய முதுகுக்கு மண் காட்டிவிட்டது! அந்தத் தோல்வியை மறைக்க என்னென்னவோ பேசுகிறார்.**

**குருபக்தி, ம. பொ. சியை, நேருஜீ, தலைவர் நேரு என்றெல்லாம் அர்ச்சிக்கச் சொல்கிறது; கொள்கையோ, நேரு பண்டிதரை, வீணுரை பேசுவோர், குப்புற விழுந்த பிறகும் வீரம் பேசுவோர், பொய்யர் என்றெல்லாம் கூறச் சொல்கிறது.**

அடக்கமாகத் துவக்க வேண்டும், இல்லையானால் அவர்கள் போலாகிவிடும் என்று கவலை குடைகிறது, கண்டிக்காமலிருக்கக் கூடாது, கண்டிக்காது விட்டோமாயின் கொள்கை புதை குழி செல்லும் என்று அச்சமும் துளைக்கிறது. எனவே, நேருஜீ என்ற மரியாதையும், உண்மைக்கு மாறாகப் பேசுகிறார் என்ற கண்டனமும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு வெளிவருகிறது.

"மேன்மை தங்கிய ஐயனே! தங்கள் மீது சிறு தூசும் வீசும் நோக்கமுடையேனல்லேன், எனினும், என் துப்பாக்கிக் குண்டு பாயவேண்டிய இடத்தில் தாங்கள் இருப்பதால் தங்கள் மீது சுடவேண்டி இருக்கிறது," என்று கூறினானும், கைத்துப்பாக்கியால் ஒருவனைக் கொல்லக் கிளம்பியவன். அதுபோல, உண்மைக்கு மாறாகப் பேசுகிறாரே, என்று எழுதுகிறார், ம. பொ. சி, குருபக்தி குலைகிறது என்பதுதானே பொருள். கொள்கையின் வழி பணியாற்றப் புகும் போது, குருபக்தி குறுக்கிட்டாலும் அதனைச் சமாளிக்கத்தான் வேண்டும், அந்த நிலைமை, ம. பொ. சி. க்களுக்கும் வந்தே தீரும் என்பதை இச்சம்பவம் விளக்குகிறது.

சுப்ரமணியனார், தமக்கு அந்தச் சங்கடத்தை வைத்துக்கொள்ளவில்லை.

மொழி, இனம், உரிமை, இவைகளெல்லாம் அவருக்கு சொற்றொடர்கள்!!

பதவி, பவிசு, இவை அவருக்குப் பொருளுள்ளவை.

இவை தாக்கப்படாதிருக்கும் வரையில், அவரால் நிம்மதியாகக் குருபக்தி காட்டிக்கொண்டிருக்க முடிகிறது

காட்கில் போன்றார் கடும் கோபம் கொள்வது போலவோ, ம. பொ. சி. போன்றார் சிந்தாகூலராவது போலவோ, சுப்ரமணியனார்க்கு சங்கடம் நேரிடுவதில்லை. அவருக்கு அதனால், 'குருபக்தி'யை வெளியிட்டுக் கொண்டிருக்க முடிகிறது; செய்கிறார்; செய்யட்டும், பாவம், இதையேனும்.

"என்ன புத்திக் குறைவடா, சீடா! கீழே விழுந்த பொருளைக் கண்டெடுக்காமல் விட்டு விட்டு வந்தனையே. ஈதோ உன் குருபக்தி?" என்று கேட்டார், குருநாதர்; பயணத்தில், அவருடைய பீதாம்பரம் தவறிக் கீழே விழுந்து விட்டதைச் சீடன், கவனியாமலிருந்ததால். சீடன் "புத்தி! குருதேவா! புத்தி புத்தி" என்று கூறிவிட்டு, பிறகு மிகக் கவனமாக, கண்ணுங் கருத்துமாகப் பணிபுரிந்து வந்தான். முடிவு என்ன, தெரியுமா தம்பி? மடம் போய்ச் சேர்ந்ததும் ஒரு பெரிய 'மூட்டை'யைக் கொண்டுபோய், குருவின் முன் வைத்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான் சீடன். "என்னடா இது?" என்று கேட்டார் குரு.

ஒன்றுவிடாமல் எடுத்து வந்தேன். கீழே விழுந்ததையெல்லாம் எடுத்து மூட்டை கட்டிக்கொண்டு வந்தேன்" என்று கூறி, மூட்டையைப் பிரித்துக் காட்டினான் சீடன். அவ்வளவும் குதிரையின் லத்தி (மலம்)

குரு—சீட தொடர்பில் இப்படியெல்லாம் 'ரகம்' இருந்திருக்கிறது. கனம். சுப்பிரமணியம் இதில் ஒரு ரகம். பாவம்.

அன்பன்,

**அண்ணாத்துரை.**

**முகப்பில்**

**சீனக் குடியரசு கண்ட மாவீரன் புரட்சித் தலைவர் டாக்டர் சன்யாட்சன்னுடைய துணைவியும், செஞ்சீனாவின் துணைத் தலைவராக விளங்குபவரும், கடந்த வாரம் இந்திய உபகண்டத்துக்கு வந்துள்ளவருமான திருமதி. சூங்-செங்-லிங் அவர்கள்.**

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
[illegible] அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.